# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."--திருவள்ளுவர்.

தொகுதி XI | காளயுக்திஸு ஆடிமீ :: 1918-ஸு ஆகஸ்ட்மீ | பகுதி 2


## செல்வச் செருக்கு

### THE PRIDE OF WEALTH

உயிர்க்கொலை புரித லுண்ணு
 முணவுமா ருட்டஞ் செய்த
லயிர்ப்பிலா நண்பர் மாட்டு
 மமைதரக் குய்யஞ் செய்தல்
பயிர்ப்புமிக் குறநல் லோரைப்
 பழித்தல்பொய்க் கரியு ரைத்தல்
செயிர்ப்பிலா லயத்தி டத்துஞ்
 சென்றுபட் டிமைமி யற்றல்.

இவைமுதற் பலவு மாந்த
 ரியற்றிநாள் கழியா நிற்ப
ரவையெலாம் பொருணி மித்த
 மாகுமப் பொருளைப் பெற்றுக்
குவையுறப் புதைத்து வைத்துக்
 குதுகுதுப் படைந்து காத்து
நவையுறு பணப்பே யென்னு
 நாமமும் பெறுவர் மாதோ.

ஒருசிறு தரும மேனு
 முஞற்றிடா ரிரப்போர் வந்து
தருகிகர் கரத்தா யென்று
 சாற்றினுங் கொள்ளா ராகிக்
கருணைசற் றின்றி யெல்லை
 கடந்திடத் துரந்து மீள்வர்
மருவுடல் கிளையு மோம்பார்
 வளம்படைத் தென்பெற் றாரால்?

முறைதவிர் கொடுங்கோன் மன்னர்
 முனிவிற்கு நனியு மச்சங்
கறைகெழு கரவு செய்வார்க்
 கரத்திற்கு மழற்கு மச்ச
மறைவறு தாய மாக்க
 ளெவ்வவ ரென்று மச்ச
மறைபொருள் பெற்று ரல்லர்
 அச்சமே பெற்றார் போலும்

ஒல்லொழுக் கினரைத் தீய
 வொழுக்கரென் றுரைக்கச் செய்யும்
புல்லொழிக் கினரைத் தூய
 புலத்தரென் றுரைக்கச் செய்யு
நல்ல கற்புடைய மாதர்
 நலத்தையஞ் சாமை செய்யும்
பல்வகைத் துயருஞ் செய்யும்
 பாழ்ம்பொருள் பற்று ளார்க்கே.

பொருவறு பந்த மெல்லாம்
 புணர்த்திடுந் தெய்வ சிந்தை
யொருவமே விட்டு நிற்கு
 மூறக்கமு மிறக்கச் செய்யுங்
கருவினுட் புகுத்து மின்ன
 கரிசுகண் டதனு லன்றோ
விருநிலத் திடைவெ றுக்கை
 யென்மனர் புலமை சான்றோர்?

சிறியரே மதிக்கு மிந்தச்
 செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
 வாயுள்ளார் மூக ராவர்
பறியணி செவியு ளாரும்
 பயிறரு செவிட ராவர்
குறிபெறு கண்ணு ளாருங்
 குருடராய் முடிவ ரன்றே!

பல்கதிர் விரித்துத் தோன்றிப்
 பாடுசெய் கதிரே போல
மல்லனீ ருலகிற் றேன்றி
 மறைந்திடு நும்மை விட்டுச்
செல்வமென் றுறுவ தற்குஞ்
 செல்வமென் றுரைக்கும் பேர்நன்
றல்லவே விளைப்ப தாக
 தரும்பெறத் செல்வம் பாவாய்!



அகப்பட்டுக் கொள்வேனென்றோ கள்வன் களவெடுக்கிறது?

விவேக போதினி

தொ. 11] காளயுக்திஞு ஆடிமீ [ப. 2

# வாயிடத் துலகு

## THE UNIVERSE IN A MOUTH.

"கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய வாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித் தாளுக்கங் காந்திட
வைய மேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே"

எவ்வுருவும் தானாகி விளங்கும் எம்பெருமானைத் துஷ்டவிஷயமூலமாக அடையும் பாக்யமிருந்தால், அவர்க்கும் நன்மையே யுண்டாகும் என்பதற்குப் பூதனையே சாட்சியாகும். முலைப்பாலை யூட்டித் தெய்வக் குழந்தையைக் கொல்லவந்தவள், தன்னுயிரையே கொடுத்துப் புனிதமானாள் எனில், அது ஓர் பெருமையாகுமன்றோ? மாயக்குழந்தையாக வளர்ந்து வரினும், பாமரஜனங்களும் அதனது தெய்விகத்தை இடையிடையே அறியுமாறு அத்புதச் செயல்களை எம்பெருமான் செய்துகொண்டு வந்தது, உலகத்தில் நிலைநின்றுவந்த நம்பிக்கையில், அதாவது அக்காலத்து மீறிவிளங்கிய கொடுமையை ஒழிக்கக் கருணாகரக் கடவுள் உலகில் தாமே வந்து உதவிசெய்வர் என்ற நம்பிக்கையில், அப்பாமரர்கள் அசையாது நிலைப்பதற்கேயாம். யமுனையாற்றைக் கடக்கும் போதே வஸுதேவர் தமது குழந்தையின் பெருமையை எண்ணி அளவுகடந்த ஆச்சரியமடைந்தனர். ஆனால் யசோதை, நந்தகோபன் இவராதியர் தம்மிடம் வளர்ந்துவரும்குழந்தையின் பெருமையை யறிவதற்குப் பூதனையின் வரவே யிடந்தந்தது. ஒரு சிறுகுழந்தை விளையாட்டாகப் பாலுறிஞ்சும்போது, கொல்ல வேண்டுமென்ற எண்ணத்துடன், படு விஷத்தைத்தடவித்தந்தமுலைப்பாலையூட்டும்போது, பாலை யுறிஞ்சுவதுபோல் உயிரையே உறிஞ்சிவிடுமானால் அது குழந்தையோ? எதுவோ? விஷத்தை யுண்டு, தேக்கி விளையாடிக் கற்கண்டை வாயுட்கொண்டாற்போலக் களிக்கும் குழந்தை அது மனிதஜாதியைச்சேர்ந்ததுவோ? அல்லது விஷத்தைக்கடந்த பொருளோ? மரணத்தை யற்ற வஸ்துவோ? எதுவோ? இவ்வெண்ணங்கள் யார் மனத்திலுதிக்கா?

பேய்ச்சி முலைப்பாலுண்ட கடவுட்குழந்தையையே யசோதை கவனித்தாள். ஆனால் அப்பேய்ச்சியுடல் கோராகாரமாக விளங்குவதைக் கண்ட கோபாலர்கள், அவளது சவத்தைக் கொண்டுபோய்க் கோடரிகளால் பிளந்து குவியலாகக் சேர்த்து, காட்டு விறகுகளுடன் அடுக்கித் தீமூட்டினார். அத்தீ வேகமாகப் படர்ந்து வீசியபுகை எங்குஞ் சூழ்ந்து சந்தனப் புகையைப்போல வாசனை வீசியது! இதுவும் ஓர் அற்புதம்போலும்! இந்நறுமணம் பூதனை புனிதையானாள் என்றுகோகுலத்தவரை எண்ணச் செய்ததென்றால் மற்றும் சொல்லவும் வேண்டுமோ? அப்பொழுதுதான் அங்கு வந்து சேர்ந்த நந்தகோபர் நடந்தவற்றை யுணர்ந்து, பேரன்புடன் குழந்தையை எடுத்து, உச்சி முகந்து உள்ளங்களித்தனர். அதுவன்றோ பெற்றோர்க் காணும் பேரானந்தம்!

இவ்விஷயங்களெல்லாம் அத்தெய்வக்குழந்தையிடம் யசோதை கொண்ட அன்பை வளர்த்தே வந்தது. அவள் அக்குழந்தையின் கல்லா மழலைச் சொற்களையும், தளர்நடையையும், சிறு செயலையுங்கண்டு,

பொன்னியல் கிண்கிணி சுட்டி புறங்கட்டித்
தன்னிய லோசை சலன்சலனென்றிட
மின்னியல் மேகம் விரைந்தெதிர் வந்தாற்போல்
என்னிடைக் கோட்டரா அச்சோ! அச்சோ!
எம்பெருமான் வாரா வச்சோ! அச்சோ!

எனக்கூறிக் களிப்பள்; தன்னை மறந்து தனது குழந்தையின் மாயப்பெருமையில் ஆழ்ந்து கிடப்பனள். இவ்வாறே நித்தம் நித்தம் அவளும் அவள் காதலனும் அக்குழந்தையின் வைபவத்தி லீடுபட்டுக்கொண்டே யிருந்தனர்.

இப்படியிருக்க, குழந்தைக்கு முதல் ஜன்ம நக்ஷத்திர தினம் வந்தது. அந்நாள் அதற்குவேண்டிய யாவும் செய்து, நந்தகோபர் வீட்டிலிருந்தவ ரெல்லோரும் குதூஹலமாக

விருந்தனர். மஞ்சன மாட்டிய குழந்தையை ஒருபக்கமாக விட்டுவிட்டு, தானழைக்க வந்த ஸ்திரீகளைத் தகுந்தவிதம் மரியாதைசெய்து, யசோதை அவரவர்களை வீட்டிற் கனுப்பிக் கொண்டிருந்தாள். இந்த ஆடம்பரத்தில்அவள் குழந்தையைக் கவனிப்பதைச் சற்றே மறந்து கிடந்தாள். ஆனால் அப்போது குழந்தை யழுகையுடன் இடியிடித்தாற்போலச் சப்தமும் கேட்டது. "அஹோ" என்றலறிக் கொண்டு யசோதை ஓடினாள்; "பால்குடிக்க அழும் குழந்தைக்கென்ன பிரமாதம் விளைந்து விட்டதோ?" என்று திகில் கொண்டே ஓடினாள். ஆனால் குழந்தைக்கு ஒருவிதக் கெடுதியையும் அவள் காணவில்லை. அதன் பக்கத்திலிருந்த வண்டிமாத்திரம் தலைகீழாகக் கவிழ்ந்து இருசு முறிந்து அச்சுவேறு ஆணிவேறாக வீழ்ந்து கிடந்தது. அதைக்கண்டதும் யசோதை பிரமித்து நின்றாள். பக்கத்திலிருந்த ஆயச்சிறுவர்கள் "அஹோ! இக்குழந்தை உதைக்க இவ்வண்டி இக்கதியடைந்தது" என்றுசொன்னால் யசோதை எப்படி நம்புவள்? கண்டவர் சொன்னாலும்கூட, நேரில் காணாதவர் ஸந்தேகம் எப்படி ஒழியும்! ஆனால், கம்ஸன் ஏவலினால் சிறு வண்டிபோலவந்த அசுரன், அவ்விளங் குழந்தையின் சிறு சதங்கைக்கால் மெல்லிய உதை தாங்காது சிதறுண்டு போனானென்பது மாத்திரம் உண்மையிலு முண்மையே. கண்டாற்கது அதிசயத்தி லதிசயம். யசோதைக்கு மாத்திரம் பிள்ளைப்பித்தினால் அது ஏற்படவில்லை போலும்! அவள் அழுங்குழந்தையை எடுத்துத் தாலாட்டிச் சீராட்டி அநேகவிதரக்ஷைகள் செய்தாள். ஜகதேக ரக்ஷகனுக்கு ரக்ஷை செய்யும் பாக்கியம் யார்க்குக் கிடைக்கும்?

'தன்னைத் கொல்லவந்த குழந்தை கோகுலத்திலேயே வளர்ந்து வருகிறான்' என்னும் எண்ணம் கம்ஸன் மனதில் வரவாத் திடப்பட்டுக்கொண்டே வந்தன. பூதனை யழிந்ததும், வண்டி யுருவாய்ச் சென்ற சகடாசுரன் முறிந்ததும் இவ்வெண்ணத்தை ஊர்ஜிதப் படுத்தியதல்லாமல், யசோதை யகத்தில் சிறு துயில் அமரும் சிறு குழந்தையே தனக்கு யமனாக வளர்வதாகவும் அவனை எண்ணச் செய்தன. தனக்குப் பகைவன் வளர்ந்து வரும் இடம் நிர்ணயமாகத் தெரிந்ததும் அவன் சும்மா இருக்கவில்லை. நல்லகாரியங்களுக் கேற்படும் பலவிக்கினங்களைப் போலப் பலவழியிலும் அக்குழந்தையை அவன் கொல்ல வழிதேடினான். அவ்வேலைக்குட்பட்ட திருணாவர்த்தனென்னும் அசுரன் திடீரெனப் புயற்காற்றாய்க் கோகுலத்தில்புகுந்து, தாயருகிலிருந்த அக்குழந்தையை எடுத்துக்கொண் டாகாயத்தில் எழும்பினான்.

அப்பொழுதுதான் யசோதை தன் மடியிலிருக்கும் குழந்தை என்றுமில்லாதபடி அஸாதாரணமாய் அதிபாரமாக விளங்குவதாக எண்ணினாள்; அப்பாரத்தைத் தாங்க முடியாது ஏக்கத்துடன் அதைக் கீழேவிட்டனள். வந்த புயற்காற்று, கல்லையும் மண்ணையும் தூசியையும் வாரியிறைத்ததால், அவ்வசுரன் குழந்தையைக் கவர்ந்து போனதை யாரும் கவனிக்கவேயில்லை; கவனிக்கவுமுடியாது.

"தன்முகத் துச்சுட்டித்
தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்
பொன்முகக் கிண்கிணி
யார்ப்பப் புழுதி யளைகின்றான்"

என்றுள்ளங் களிக்கும் யசோதை சற்றே விழித்துக்கொண்டு தன் குழந்தையைக் காணாது பரிதபித்தனள்; துக்கித்தனள்; அலறினள்; மெய்பதறினள். அப்போது கோகுலத்தவர் எல்லோரும் அவளுடன் துக்கித்தனர்.

ஆனால் அவ்வஸுரன், தன்னை மிகுந்த உயரம் எடுத்துப் போகும் வரையும், அக்குழந்தை ஒன்றும் செய்யாது சாந்தியும் அமைதியும் தவழ்ந்து விளங்கியது. எனினும், தனது நிறையை மாத்திரம் விருத்தியாக்கிக் கொண்டேயிருந்தது. மிக்கவுயரம் சென்றதும், அக்கடவுட் குழந்தை தனது பெரும்பாரத்தை அவ்வஸுரன்மேல் வைத்துத் தாக்கியது. பெருமலை போல் தன் மேல் அச் சிறு குழந்தை கனப்பதைக் கண்டதும் திருணாவர்த்தன் நடுங்கினான்; மேலும் அக்கனம் வரவர அதிகமாவதைக் கவனிக்க அவனுக்குப் பெரும் ஆபத்து வந்துவிட்டதென்ற பயம் ஏற்பட்டது. குழந்தையும் பயந்து கொண்டது போலக் காட்டிக்கொண்டு அவன் கழுத்தைக் கெட்டியாக இறுகக் கட்டிக்கொண்டது. அவன் என் செய்வான்? அக்குழந்தையை வீசி எறிய எவ்வளவோ முயற்சித்தான். அது ஏன் அவனைவிடும்? தன்னை யடைந்தவரை விடும் வழக்கம் அதற் கென்றேனு மிருந்ததுண்டா? நிற்க, அக்குழந்தையை விடவும்

அகோர தவசி, விபரீதசோரன் :: அகோர தவசி விபரீத நிபுணன்.

முடியாது, வைத்துக் கொள்ளவு முடியாது, திருணவர்த்தன் கைகால்களை உதறிக்கொண்டு பதறிக்கொண் டிருந்தான். மற்றுக் கழுத்தை யிறுக்கிய குழந்தையின் கைகளோ சிறிதும் தளராது முறுக்கிக்கொண்டே யிருந்தன. அவன் மூச்சுத் திணரியது;கண்விழி பிதுங்கிக் கலங்கியது. குழந்தையின் அளவுகடந்த பாரமும், தன் நிறையும், தன் கைகால்களை உதறிக் கொள்ளும் வேகமு மிழுக்க, அலறிக்கொண்டு, அவன் பெரிய மலைபோலப் பூமிமேல் உயிரற்று விழுந்தான். மலைமேற் கிளம்பும் செழுஞ் சுடர்ப் போல அம்மாயக் குழந்தை அவன் மார்பின் மேல் தவழ்ந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட கோகுலத்தார் ஆச்சரிய மடைந்து, "அகோ! இக்குழந்தை பிழைத்தது அற்புதம்! அற்புதம்!" என்று வாயார வாழ்த்தினர். யசோதையோ அக்குழந்தையை ஓடோடியும் வந்து எடுத்துச்சிமுகந்து முத்தமிட்டு மார்போடணைத்துக் கொஞ்சிவிளையாடி மெய்ம்மறந்து,

"காள்களோரைந்து திங்க ளளவிலே
தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள்கொள் வளையெயிற் றுருயிர் வவ்வினன்
தோள்க ளிருந்தவா காணீரே!
சுரிகுழலீர் வந்து காணீரே!"

எனக் கொண்டாடினள். நந்தகோபன் மாத்திரம் "அந்த வஸுதேவர் மஹான் மஹானே! அவர் அப்போதே எச்சரித்தனரே! அவர் வருங்கால ஞானமுடையவர். இக்குழந்தையே பெரியவனாகிப் 'போரொக்கப் பண்ணி யிப் பூமிப்பொறை தீர்ப்பான்!' இது நிச்சயம்" என எண்ணி எண்ணி வியந்து கொண்டிருந்தான்.

ஏன் யசோதை மாத்திரம் தன் குழந்தையின் தெய்விகத்தை நம்பாது கிடந்தனள்? அதற்கு அவள் தன்குழந்தையிடங் கொண்ட அளவு கடந்த ஆசையே காரணமோ? அல்லது அதன் தெய்விகத்தை யுணர்ந்துவிட்டால் அதனிடம் அன்பு நீங்கி, அச்சமும் மரியாதையும் ஏற்பட்டுவிடுமெனத் தாயன்பின் பெருக்கைக் காட்ட எம்பெருமான் செய்த லீலா விசேஷமோ? எதுவாயிருக்கலாம்?

ஆனல் ஒருநாள் என்றிலுமதிக ஆதரவுடன் யசோதை தன் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தனள். தன் மடிமீது தவழ்ந்து ஒரு கையால் சிறு குறும்பு செய்து, மறுகையால் பிடித்துப் பாலுண்ணும் குழந்தையின் திவ்விய வைபவத்தை அனுபவித்து,

"வைத்த நெய்யும் காய்ந்த பாலும்
வடிதயிரும் நறுவெண்ணெயும்
இத்தனையும் பெற்றறியேன்,
எம்பிரான்! நீபிறந்தபின்னை
எத்தனையும் செய்யப் பெற்றாய்
ஏதும்செய்யேன் கதம் படாதே
முத்தனைய முறுவல் செய்து
மூக்குறிஞ்சி முலையுணாயே!
ஓடவோடக் கிண்கிணிகள்
ஒலிக்கு மோசைப் பாணியாலே
பாடிப்பாடி வருகின்றாயைப்
பற்பநாப னென்றிருந்தேன்
ஆடியாடி யசைந்தசைந்திட்
டதனுக்கேற்ற கூத்தையாடி
ஓடியோடிப் போய்விடாதே
உத்தமாநீ முலையுணாயே!"

எனத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டதனிடம் கொஞ்சிக்கொஞ்சித் தன் முலைப் பாலமுத மூட்டினள். அவ்வன்பின் மிகுதியால் பாலுண்டு திருப்தி யடைந்த அந்தக் குழந்தை பால்குடிப்பதை விட்டுத் தன் தாய் முகத்தைப் பார்த்துச்சிரித்துக் கைகளை முறுக்கிக்கொண்டு கொட்டாவிவிட்டது. அப்போது யசோதை என்ன காட்சி கண்டனள்! என்ன ஆச்சரியமது! அண்டபிண்ட சராசரங்களும், அகிலபுவனங்களும், சூர்யசந்திராதிச் சுடர்களும், நக்ஷத்திரங்களும், காற்றும் புகையும், மலையுங்கடலும், நாடும்நகரமும், ஆறுகளும் காடுகளும்இவைமுதலாயதாவரஜங்கமங்களும் சராசரிகளும்,பல்லுயிர் ஆக்கமும் பெருக்கமும் அழிவும் ஆகிய ஸர்வஜீவ சிருஷ்டியின் வைபவங்களையும்அச்சிறு வாயுள் ஒடுங்கி விளங்கக் கண்ட அவள் கண்கள் ஏன் திகைக்காதிருக்கும்? அக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட, கேவலம் தாயாசையிற் பதிந்து விளங்கும் அவள் ஏன் பயங்கொள்ளாள்? அக்கண்விண்ட கோலத்தைக்கண்ட அவள், மயங்கித்தன் கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டாள். மாயையே யல்லவா உண்மையை யறியவொட்டாதெப்போதும் தடுப்பது? யசோதை கண்ணைத் திறந்தாள். குழந்தையும் அதற்குள் வாயை மூடிக்கொண்டது; அக்காட்சியு மறைந்தது; யசோதைக்கு அக்குழந்தை அற்புதக் குழந்தை என்ற நினை வழிந்தது. அக்குழந்தையின் தெய்விகத்தை அவளுணராததற் கிப்போதாவது காரணந் தெரிய வருமென்? அது எதுவோ?

## புளியம் விதையை கால்நடைத் தீவனமாய் உபயோகித்தல்

### TAMARIND SEEDS AS FOOD FOR CATTLE

இவ்விந்து தேசத்திலுள்ள மரவர்க்கங்களில் மிகவும் உபயோகமுள்ளதும் பார்வைக்கு அழகுள்ளதுமான மரங்களில் புளியமரம் ஒன்று. இம்மரத்தை அநேக இடங்களில் தோப்புகளாயும், சாலையோரங்களில் சாலை மரங்களாயும் பயிராக்கும் வழக்கம் எங்குமிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இம்மரம் விதைபோட்டு உண்டாக்கியபின், அநேகமாய் ஜலமில்லாமல் வளரக்கூடிய சக்தியுடையதால், இதை அநேக இடங்களில் தோப்புகளாய் உண்டுபண்ணியிருக்கிறார்கள். இத்துடன் இதன் இலை, பூ, காய், பழம் ஜனங்களுக்கு மிகவும் உபயோகமுள்ளவைகளாயும், அதன் பழத்திலிருந்து எடுக்கும் புளி நமது ராஜதானியிலுள்ள ஏழை முதல் மகாராஜாவரையுள்ள எல்லோருக்கும் தினசரிச் சாப்பிடும் காய்கறி குழம்பு ரசம் முதலாகிய பதார்த்ததங்களின் சமையலில் ஏராளமாய் உபயோகப்படுத்தப்படுகிறது எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். ஆகவே, இம்மரம்ஜனங்களுக்குப்போஜன விஷயங்களுக்கு இன்றியமையாத புளியைக் கொடுப்பதுடன், சாலைகளிலும் தோப்புகளிலும் வேண்டிய நிழலைக் கொடுத்து உபகாரப்படுகிறது. இதன் விறகும் ஜாஸ்தி உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடிய விறகுகளில் சேர்ந்ததால், இம்மரம் பட்டுப்போனபின் சூளைகளுக்கும் அடுப்பெரிக்கவும் உபயோகப் படுவதுடன், இம் மரத்தின் வைரப்பாகத்திலிருந்து உலக்கைகள், செக்குகள் முதலாகியவைகளும் செய்யப்படுகின்றன. இம்மரம் ஸாதாரணமாய்ச் சித்திரை வைகாசி(ஏப்பிரல், மே) மாதங்களில்புஷ்பித்துக்காய்த்து, மார்கழி (ஜனவரி) மாதத்தில் அக்காய்கள் பழுக்கும். சாதாரணமான ஒரு பெரிய மரத்திலிருந்து சராசரி 400 முதல் 500 இராத்தல்வரை புளி எடுக்கக்கூடும். இப்புளி இந்தத் தேசத்தில் சமையல் கறி துவையல் முதலியவைகளுக்கு உபயோகப் படுவதுடன் ஏராளமாய் மற்றப் பிராந்தியங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மரங்களிலிருந்து எடுத்து விற்கத் தயாராயிருக்கும் புளியம் பழங்களை எடுத்து அதில் எவ்வளவு தோல், புளி, விதை முதலாகியவைகள் கிடைக்குமென்று கணக்கிட்டபோது, 100 இராத்தல் உலுக்கிய பழங்களில் 55 இராத்தல் புளியும், 34 இராத்தல் விதையும், 11 இராத்தல் நரம்பு முதலியவைகளும் கிடைத்திருப்பதாய்க் கணக்கிட்டிருக்கிறார்கள். புளிய மரங்கள் ஏராளமாயிருக்குமிடங்களிலெல்லாம், பழங்களிலிருந்து புளியை அப்புறப்படுத்திவிட்டு, விதைகளைத் தூர எறிந்துவிடும் வழக்கமிருந்துவருகிறது. இப்படித் தூரத்தில் எறிந்துவிடும் விதைகளைச் சில ஏழை ஜனங்கள் வருத்து, பஞ்சக்காலங்களில் சாப்பிடுகிறார்களென்பது நமக்கெல்லோருக்கும் தெரிந்த விஷயம். சிலர் இதைச் சாதாரண காலங்களில்கூட, வறுத்துச் சாப்பிடுகிறதை நாம் பார்த்திருக்கிறோம். இவ்விதைகளுக்குச் சாதாரணமா யாதொரு விலையும் கிடையாது. ஆனால் இவ்விதைகளிலிருந்து பசைசெய்து, காகிதப் பெட்டிகள் முதலியவைசெய்பவர்கள், இவ்விதைகளைப் பொறுக்கிக் கொண்டுவந்து கொடுப்பவர்களுக்கு ஏதோ இனாம் கொடுப்பதுண்டு. கிருஷ்ணா ஜில்லாவில் மாத்திரம் இவ்விதைகளை அற்பவிலைக்குவிற்றுக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் இவ்விதையைச் சாப்பிடுமுன், வறுத்தாவது அல்லது வேகவைத்தாவது மேல் தோலை நீக்கி, உள்ளிருக்கும் பருப்பைத் தின்பதுண்டு. சிலர் இந்தப் பருப்பிலிருந்து மாவுசெய்து, அதை ரொட்டிகளாய்ச் செய்துசாப்பிடும் வழக்கமுமுண்டு. இவ்விதையிலிருந்து செய்யும் பசையைப் புஸ்தகங்கள் பயிண்டு செய்வதிலும், செருப்பு முதலிய பாதரக்ஷைகள் செய்வதிலும் உபயோகப்படுத்தி வருகிறார்களே ஒழிய, வேறு விஷயங்களில் உபயோகப்படுத்தி வருவது எல்லாருக்கும் தெரியாது. திருநெல்வேலிஜில்லா தென்காசித் தாலுக்காவிலும், செங்கோட்டை முதலிய இடங்களிலும் இவ்விதைகளைச் சந்தைகளில் கொண்டுவந்து விற்கிறார்கள். சிலர் இதைமாட்டுத்தீவனத்திற்காகவும் உபயோகப்படுத்துகிறார்களென்று தெரியவருகிறது. சாதாரணமாய்ப் புளியம்பழம் அகப்படும் காலங்களில், விதைகளை ஏராளமாய் வாங்கி அவற்றைச் சட்டியில் போட்டு வறுத்து, சாக்குகளில் கட்டிவைத்துக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்வதில்,

அக்குத் தொக்கு இல்லாதவனுக்குத் துக்கம் என்ன வந்தது ?

புளியம்விதைகள் லேசில் புழுத்துப்போகாமல் அப்படியே இருக்கும்சக்தியை அடைகின்றன. அப்பால் தினசரிவேண்டிய அளவு புளியங்கொட்டையையெடுத்து உரலில்போட்டுக்குத்தித்தோல்நீக்கிப் புடைத்துஉள்பருப்பைச்சுமார் 20 மணிநேரம் ஊரப்போட்டுவைத்து மாடு ஒன்றுக்கு பட்டணம்படி அரை வீதம் வைத்தால்மாடுகளுக்குப்பிண்ணாக்குபருத்திக்கொட்டை முதலியவைகள் வைக்கவேண்டுவதில்லை. முதல் முதல் மாடுகள் இதைத் தின்று வழக்கமாகிறதற்காக, பருத்திக்கொட்டை, கொள், அல்லது பிண்ணாக்கு முதலிய தீவனப் பொருள்களை ஊரப்போட்டு, அந்த தண்ணீரை மாடுகள் குடித்து வழக்கம் வந்த உடனே இப்புளிய விதைகளை மாத்திரம் தனியே ஊரப்போட்டு வைத்து வருகிறார்கள். புளிய விதையை, ரசாயன பரிசீலனம் செய்து பார்த்து ஹூப்பர் என்பவர் மாட்டுத் தீவனத்துக்கு வேண்டிய உயர்ந்த உணவுப் பொருள்கள் அதிலிருப்பதாகக் கண்டிருக்கிறார்.

மேலும், இப்புளிய விதையையும் பருத்திக் கொட்டையையும் ரசாயன பரிட்சைசெய்து பரிசீலனம் பண்ணி இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தால், புளியம் விதையிலுள்ள அம்சங்கள் அநேகமாய்ப் பருத்திக்கொட்டையிலுள்ளவைகளுக்குத் தாழ்ந்திருக்கவில்லையென்றூகிக்கவேண்டியதாயிருக்கிறது. புளியம்விதை தற்காலத்தில் பொதி ஒன்றுக்கு ரூபாய் 2-க்குள் கிடைக்கிறது. ஆனால் பருத்திவிதையின் விலையோ ரூபாய் பத்துக்குக் குறைகிறதில்லை. ஆகையால் புளியம்விதை பருத்திவிதையைப்போலச் சத்துள்ள கால்நடைத் தீவனமாயிருந்தபோதிலும், விலை சரசமாயுள்ளதால் அதை எல்லாரும் கையாடக்கூடிய வஸ்துக்களில் ஒன்று. இந்த விதையைத் திருநெல்வேலி ஜில்லாவின் சில பாகங்களிலும் மலையாளத்தில் செங்கோட்டை முதலிய சொற்ப இடங்களிலும் மாத்திரம், கால்நடைத் தீவனமாய்த் தற்காலம் உபயோகப்படுத்துகிறார்கள்.

ஒரு கால்நடைத் தீவனத்தின் கிரயம் அந்தத் தீவனத்தின் உபயோகம் நல்லதென்று தெரியும்வரைதான் சரசமாய் இருக்குமே தவிர, தெரிந்தபின் கிரயம் ஜாஸ்தியாய்விடும். நமது அனுபோகத்தில் மணிலாக்கொட்டைப் பிண்ணாக்கு 1875-ம் வருஷத்தில் 500 இராத்தல் கொண்ட பாரம் ஒன்றுக்கு ரூ. 5-க்கு மேல்படாமல் வாங்கியிருக்க, தற்காலத்தில் அது ரூ. 13 முதல் 15 வரையும் விற்கிறது. 1875-ம் வருஷத்தில் இப்பிண்ணாக்கைக் கால்நடைத் தீவனமாய் உபயோகப்படுத்தலாமென்று காலஞ்சென்ற ராபர்ட்ஸன் துரையவர்கள் சைதாப்பேட்டை விவசாய காலேஜ் வருஷாந்தர ரிபோர்ட்டுகளில் எழுதியதை ஜனங்கள் நம்பாமல், அதைக் கால்நடைகள் தின்றால் கெட்டுப் போய்விடுமென்றும் கண்தெரியாதென்றும் சொன்னார்கள். ஆனால் தற்காலத்தில் அநேகர் அதைக் கால்நடைத் தீனியாய் இத்தேசத்திலும், அயல் தேசங்களிலும் உபயோகித்து வருகிறார்கள். இதேமாதிரி தற்காலத்தில் கோட்டை ஒன்றுக்கு அதாவது பட்டணம் படி 114-க்கு ரூபா 3 வீதம் விற்கும் புளியம் கொட்டை, இனி சில வருஷங்களுக்குள் மும்மடங்கு ஜாஸ்தி கிரயத்திற்கு விற்குமென்பதில் சந்தேகமில்லை.

---

## கல்விக் குறிப்புகள்

## Educational Notes

**மைஸூரில் கீழ்த்தர ஜாதியாரின் கல்வி.**

மைஸூர் ஸர்வ கலாசாலைக்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் பிரதம வகுப்புக்களில் படிக்கும் 'கீழ்த்தர' ஜாதிப்பிள்ளைகளின் சவுகரியத்துக்காக எழுபது வித்யாவிர்த்தி (Scholarship)கள் கொடுக்கப்படுகின்றனவென்பதைக் கேட்டு நாம் சந்தோஷிக்கிறோம். அவைகள் ஒவ்வொன்றும் மாதம் பத்து ரூபாய் அளவினதாய்ச் சென்ற ஜூலை மாதம் 1௳ முதல் கொடுக்கப்படுமெனவும் தெரிகின்றது. அவைகளில் 18 விர்த்திகள் லிங்காயதர்களுக்கும், 12 விர்த்திகள் மகம்மதியர்களுக்கும், 6 விர்த்தி பணஜிகர்களுக்கும், 5 விர்த்தி வொக்கலிங்கருக்கும், பாக்கியுள்ளன வேறு பத்தொன்பது வகுப்பினருக்கும் கொடுக்கப்படுகின்றன. நமது மாகாணத்திலும்

அசல்வீடு வாழ்ந்தால் பரதேசம் போகிறதா? :: அசல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி,

புத்திவன்மையில் முதிர்ச்சியடையாத வகுப்பார்க்கு வித்யாவிர்த்தி கொடுக்கப்படுகிறது என்பதை அபிமானிகள் அறிவார்கள். வித்யா விஷயமாக எவ்வளவு தூரம் சவுகரியம்செய்து கொடுத்தபோதிலும் நன்மைதான்.

* * *

**பர்மா ஸர்வ கலாசாலை**

இந்திய மாகாணங்களில் ஒன்றாகிய பர்மாவுக்குப் பிரத்யேகமாக ஒரு ஸர்வ கலாசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டியதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றனவென்பது அபிமானிகளுக்குத் தெரிந்திருக்கலாம். அது விஷயமான மசோதா ஒன்று சீக்கிரம் இராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் கொணரப்படும். முதன்முதல் ரங்கோன் காலேஜும், பாப்டிஸ்ட் காலேஜுமே ஸர்வ கலாசாலையைச் சேர்ந்த காலேஜ்களாக இருக்கும். ஸர்வகலாசாலை ஏற்படும்போது வேண்டியிருக்கும் சிப்பந்திகளைப்பற்றிய கணக்கு ஒன்று தயார் செய்யவேண்டியதற்காக அந்த மாகாணத்து லெப்டினண்டு கவர்னர் ஒரு கமிட்டி ஏற்படுத்தி, விஷயங்களைத் தீர விசாரிக்கும்படி செய்திருக்கின்றனர். பாடங்களின் கிரமம், பரீக்ஷைதோரணை, யோக்கியதா பத்திரங்கள், வேறு விதமான வித்யாபட்டங்கள், சிப்பந்திகளின் ஸங்கியை, ஸன்மானம், யோக்கியதை முதலியவைகளைப்பற்றி இந்தக் கமிடியார் விசாரித்துத் தீர்மானம் எழுதுவார்கள்.

* * *

**உஸ்மானிய ஸர்வ கலாசாலை.**

ஹைதராபாத் ராஜ்யத்தில் "உஸ்மானிய ஸர்வ கலாசாலை" என்ற பேருடன் ஒரு ஸர்வ கலாசாலை ஏற்படப் போகிறதென்பதையும் அதில், உர்து பாஷை மூலமாகவே கல்வி கற்பிக்கப்படுமென்பதையும் அபிமானிகள் அறிந்திருக்கலாம். அதற்கு வேண்டிய புஸ்தகங்களை இங்கிலிஷ் பாஷையிலிருந்து உர்து பாஷையில் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கின்றனர் என்ற சமாசாரம் நமக்கு எட்டுகின்றது. அடுத்த அக்டோபர் மாதம் முதல் காலேஜ் வகுப்புகள் தொடங்கும். பிரதான உபாத்தியாயர் (Principal) ஒருவர் 1,000 ரூபா சம்பளத்தில் அமர்த்தப்படுகிறார். அவருக்கு மாதமொன்றுக்கு 500 ரூபா உதவிப்பணமாகவும் கொடுக்கப்படும். 500ரூபாவில் தொடங்கி 1,000ரூபாவில் முடியும் பதினொரு உபன்யாஸகர்களும், 50-600ரூபாவில் பதினொரு உதவி உபன்யாஸகர்களும் நியமிக்கப்படுகிறார்கள். வருஷமொன்றுக்கு அதமபக்ஷம் 1,18,800ரூபா செலவாகுமென்றும், உயர்ந்தால் 2,19,600ரூபாவுக்கு மேல் செலவுபோகாதென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே புஸ்தகங்கள் வாங்குவதற்காகக் 65,500ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. இதே விஷயத்துக்காக வருஷவாரியில் 10,780 ரூபா கொடுபடவும் ஏற்பாடு ஆயிருக்கிறது.

இந்த உஸ்மானிய ஸர்வ கலாசாலையார் நடத்திய 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷை நாளது மாதத்தில் நடைபெற்றது. 500 வித்யார்த்திகள் பரீக்ஷைக்கு வந்திருந்தனர்.

இந்தியாவில் உள்ள மற்றைய ஸர்வ கலாசாலைகளில் காணப்படும் சீர்கேடுகளும் துர்த்தசைகளும் இந்த உஸ்மானிய ஸர்வ கலாசாலையில் நிகழாமலிருக்கும்படி அங்குள்ள அதிகாரிகள் ஜாக்கிரதை எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறோம். விஷயங்களைப் பிள்ளைகள் கிரகித்துக் கொள்வதுதான் கல்வியின் முதல் நோக்கம். பரீக்ஷையில் அநேக மாணாக்கர்களைத் தேற வொட்டாமல் செய்யும் கேள்விகளைக் கேட்பதுதான் வித்யா விஷயத்தின் சிறப்பென்று கொள்வது பெருந்தவறு.

* * *

**பிரதம உபாத்தியாயர்கள் மஹாநாடு.**

உயர்தரப் பள்ளிக்கூடங்களில் தலைமை வகிக்கும் உபாத்தியாயர்கள் நாளது மாதத்தில் சென்னை, திருவல்லிக்கேணி, ஹிந்து ஹைஸ்கூல் கட்டடத்தில் கூடினார்கள். 31 உபாத்தியாயர்கள் வந்திருந்தனர். ஸ்ரீமான்ராவ் பஹதூர், எஸ் அப்புசாஸ்திரியாரவர்கள் தலைமை வகித்தனர். வித்யாவிஷயமாய்ச் சிரத்தையெடுத்துக் கொள்ளும் இவர்கள் கீழ்க்கண்ட முக்கியமான தீர்மானங்களைச் செய்திருக்கின்றனர். அவையாவன: நடுத்தரப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்களுக்கு இன்னும் ஜாஸ்தியான சம்பளம் கொடுபடவேண்டும்; பிரவேசபரீக்ஷையில்ஒரு பாகம் தவறிய மாணாக்கன் அடுத்த தடவை பரீக்ஷைக்குப் போகும்போது, அவனிடமிருந்து முழுக்கட்டணமான 12 ரூபாவை வாங்

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.

காமல் பாடத்துக்குத் தகுந்த குறைந்த விகித மான கட்டணத்தை வாங்கவேண்டும்; ஸ்கூல் பைனல் பரீக்ஷாதிகாரிகளில் பள்ளிக்கூடங் களில்கல்விபோதித்துவரும்உபத்தியாயர்களின் ஸங்கியை அதிகமாக வேண்டும்; நடுத்தரப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களில் சிலர் ஸர்வ கலாசாலைச் சங்கத்தில் அங்கத்தினராக ஏற் றுக்கொள்ளப்படவேண்டும்; கைத்தொழிலை அபிவிர்த்திசெய்வதற்கான தொழிற் பள்ளிக் கூடமொன்று சென்னையில் கவர்ன்மெண்டா ரால் ஏற்படுத்தப்படவேண்டும்; ஸ்கூல்பைனல் பரீக்ஷைக்கு ஏற்படும் புஸ்தகங்கள் இன்னின் னவை யென்று ஒவ்வொரு வருஷத்திலும் மே மாதத்திலேயே வெளியிடவேண்டும்; இங்கிலாந்தில் உள்ளதைப்போல இங்கும் கைத்தொழில் முதலிய விஷயங்களில் சிரத் தைகாட்டி உழைக்கும் பள்ளிக்கூட அதிகாரி களின் முழுச்செலவையும் கவர்ன்மெண்டார் ஒத்துக்கொடுக்கவேண்டும்;— என்பனவே.

மஹாநாடு முடிவில், வித்யா இலாகா அதி காரியான ஸ்ரீமான் ஸ்டோன் துரையவர்களை வரவேற்றி உபசரித்ததுடன் ஸபை கலைந்தது. அடுத்த மஹாநாடு அடுத்த வருஷம் அக்டோ பர் மாதத்தில் கூடும்.

* * *

**கல்வியும் ஐரோப்பிய யுத்தமும்**

ஐரோப்பிய யுத்தம் காரணமாகப் பணத்தட் டுப் பாட்டால் நமது நாட்டில் தள்ளிவைக் கப்பட்டிருக்கிற பற்பல விஷயங்களில் வித்யாவிஷய மாகச் செய்ய வெண்ணிய சில சீர்திருத்தங்களும் அடங்கும். ஆனால் இந்த யுத்தம் பிற நாடுகளில் வித்யா விஷயமான முயற்சிக்குக் குறுக்கே நிற்க வில்லை. இங்கிலாந்தில் வித்யாமந்திரியான ஸ்ரீமான் பிஷர் (Fisher) பார்லிமெண்டில் கொண்டு வந்த மசோதாவைப்பற்றி முன்பு ஒரு சஞ்சிகையில் விஸ்தாரமாகச் சொல்லி யிருக்கிறோம். பிரான்சுத் தேசத்தில் பிள்ளை களுக்கு இருபது வயது வரையிலும், பெண் களுக்குப் பதினெட்டுவயதுவரையிலும்கல்வி கட்டாய மாக்கப்படுவதற்கான மசோதா வொன்று சட்டசபையில இருக்கிறது. ஜர் மனி தேசத்திலும் கல்வியை விஸ்தாரமாக்கு வதற்கான ஏற்பாடு வெகுதூரம் வரையிலும் விருத்தியடைந்திருக்கிறது. ருஷியாதேசத்தில் புதிய பள்ளிக்கூடங்கள் தலைகாட்டுகின்றன. இதாலி தேசத்தில் கல்வியைக் கற்காத யுவாக் களுக்கு வேண்டிய வித்யா சவுகரியத் துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. போலண்டு தேசம் வெகு சிறியது. இந்த யுத் தத்தில் அதற்குத் தற்காலிகமான சுயேச்சை கிடைத்தது. அத்தருணத்தில் அங்கு பிரதமக் கல்வியை இலவசமாகவும், கட்டாயமாகவும் ஆக்கிவிட்டனர். யுத்தச் செலவு ஒரு புற மிருக்க, செலவோடு செலவாய், கல்வி விஷயத் திலும் நமது கவர்ன்மெண்டார் கவனம் செலுத்திப் புண்ணியத்தைக் கட்டிக் கொள் வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

* * *

**ஸ்திரீகளும் வித்யா இலாகவும்.**

பம்பாய் மாகாணத்தில் எல்பின்ஸ்டன் கலா சாலையில் தேச சரித்திர பாடத்துக்கு மிஸ் மார்ஜரி மாய்னெட் என்ற ஸ்ரீமதி உபந்யாஸிகையாக நியமிக்கப் பட்டிருக்கிற சங் கதியை அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். இதுவரையில் இந்தியாவில் இப்படிப்பட்ட நியமனம் செய்யப்படவில்லை. ஸர்வ கலாசாலைப் பரீக்ஷைகளில், புருஷர்களை ஒப்பந்தம், "பாஸ் செய்த" ஸ்ரீமதிகளுக்கு அப்புருஷர்களுக்குக் கொடுபட்ட சுவாதந்திரி யம் இதுவரையில் கொடுபடாமலிருந்தது அநியாயம் என்றே நாம் சொல்வோம். இப் படிப்பட்ட நியமனத்தினால் எங்கே ஸ்திரி கள் "போட்டியாக" வந்துவிடுவார்களோ என்ற சங்கை புருஷர்களுக்கு இருக்கவேண் டியதில்லை. உபாத்தியாயர்களும் உபன்யாஸ கர்களும் அடங்கிய கோஷ்டியில் ஸ்ரீமதி ஒரு த்தி இருப்பாளானால் அக்கோஷ்டிக்குப் பிரத் யேகமான சோபையுண்டாகும்.

நிற்க, நமது மாகாணத்தில், இந்திய ஸிவில் ஸர்வீஸைச் சேர்ந்த ஒருவருக்குக் காலேஜில் உபன்யாஸக உத்தியோகம் கொடுப்பட்டதை யும் அபிமானிகள் அறியவேண்டும். இதுவும் புதியநியமனம். மேற்கூறிய இரண்டு உதாரண ங்களும் கல்வி விஷயத்தில் உண்டானதோர் நவீனக் கிளர்ச்சியைக்காட்டுகின்றன. வித்யாபி விருத்தியின் பொருட்டேதான் இக்கிளர்ச்சி யுண்டாயிற்றென்று நாம் நம்புகிறோம்.

*

## தாய்ப்பாஷையில் கல்விப்பயிற்சி

## EDUCATION IN VERNACULARS

[மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பதினேழாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்து அக்கிராசனர் திருவனந்தபுரம் ஹைகோர்ட் ஜட்ஜ் ம-ா-ா-ஸ்ரீ கே. ஜி. சேஷய்யரவர்கள் செய்த உபந்நியாஸம்.]

சங்கப் புலவரொடு தாமிருந்து தண்டமிழைத்
துங்கம் பெறப்புரந்த சுந்தரரின்—பங்கசத்தாள்
சென்னிமிசை வைப்பாஞ் செந்தமிழ்நம் சங்கமிது
மன்னி வளரும் பொருட்டு.

பல்கலையாயும் பல்சான்றீரே!

நும்மனோர் குழுமிய இவ்வவையின்கண் தலைமை யேற்றுக்கோடற்குரிய பண்பும் ஆற்றலும் ஒரு சிறிது மில்லேனாயினும், தமிழன்னையின்பால் யான் கொண்டுள்ள பேரன்பும், இம் மதுரைச் சங்கம் புரப்பவராய்ச் செந்தமிழ் வளர்க்கு முரிமையும் போற்றுந் திறனும் பெற்றுப் புகழ்வாய்ந்த மாண்பரும் என் நண்பருமாகிய கௌரவம் பொருந்திய ஸ்ரீமான் இராஜாதிராஜ முத்துவிஜய ரகுநாத ராஜராஜேச்வர முத்துராமலிங்க சேதுபதி மன்னரது ஆணையை மறுக்க வலியின்மையுமே என்னை இப்பெரும் பதவி வகிக்க இசைவித்தன. இப்பதவி வகிக்கும் வண்ணம் என்மாட்டுக் கௌரவம் காட்டின நமது சங்கத்தின் அக்ராசனாதிபதியவர்கட்கும் சங்கத்தைச் சேர்ந்த ஏனையோர்கட்கும் எங் நன்றி செலுத்துவன்?

இன்றைத்தினம் ஆகஸ்டுமீ 4உ என்பதை நீங்கள் அறிவீர்கள். நான்கு வருடங்கட்கு முன்பு 1914ஹு இதே தேதியில் ஜர்மானியர் துரைத்தனமுறை வழுவி, பெல்ஜிய ராஜ்யத்தில் கடக்க, பெல்ஜிய மன்னன் நம் சக்ரவர்த்திப் பெருமானிடம் உதவிவேண்ட, நம் காவலர் பெருமான் பெல்ஜியத்திற் குற்ற பேரிடரை நீக்கி, அச்சிறு ராஜ்யத்தின் சுதந்திரத்தை ஜர்மானிய அரசனது கொடுங்கோல் முறைமைக்கு இரையாகவிடாமல் மீட்டுதற்காக, தர்மப்போர் புரியத் தலைப்பட்டனரென்பது எல்லோரும் நன்கறிந்த விஷயம். தர்மமும் அதர்மமும் ஒன்றோடொன்று போர் புரிந்தால், அதர்மம் எவ்வளவு வலியுடையதாய்த் தோன்றினும், கடைசியில் தர்மமே ஜயிக்கும் என்பதற்கு மஹாபாரதப் போரே நற்சான்றாகும். மஹாபாரதப் போரோ பதினெண் தினங்களே நிகழ்ந்ததாகப் புராணம் கூறும். இக்கொடும் போரோ, இந்நான்கு வருடங்களாக ஓயாமுயற்சியுடன் செய்யப்பெற்றும் இன்னு முடியவில்லை. இதனால் உலகத்திற்கு இதுகாறு மேற்பட்ட கஷ்டமும் நஷ்டமும் அளவிடற்பாலதல்ல. போர் நிகழுமிடமட்டுமன்றி உலகமுழுதுமே பலவாற்றானும் கருங்கலியால் வருந்தித் துன்புறுவதை யாரே மனம்பதைக்காமல் நினைக்கவல்லார்! துஷ்ட நிக்ரகமும் சிஷ்டபரிபாலனமும் உரிமையாகக் கொண்ட இறைவர்க்கிறையான பரம்பரனருளால் கடிதில் நம் ஆங்கில ஸாம்ராஜ்யமும் அத்துடன் ஐக்யங்கொண்டுள ராஜ்யங்களும் முற்றும் ஜெயம்பெற்று வெற்றிமாலையை மேதகப் புனைந்து, வையகத்தின் துயர்தீர்க்க, இன்று ஆங்கில அரசாக்ஷிக்குட்பட்ட எல்லா நாடுகளிலும் ஜனங்களனைவரும் கடவுளை வேண்டுவாராவார். நாமும் அவ்வண்ணமே தமிழ்க்கடவுளை யொருமனத்துடன் வேண்டுவோமாக! சீக்கிரத்தில் நம்மவர் இவ்வன்போரில் வெற்றமுறவும் உலகில் தீயவெலா மாழ்ந்து அறம்பொருள் இன்பம் பெருகவும் கடவுள் பூர்ணமாய்க் க்ருபைசெய்வாராக!

நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாவது ஆட்டைத்திருநாள் கொண்டாட இன்று கூடியிருக்கின்றோம். ஹிந்து தர்மசாஸ்திரத்தின்படி பதினாறாவது வயதுமுடிய; வாலிபப் பருவம் நீங்கலாகும். பாலப்ராயத்தைவிட்டு யௌவனப்ராயத்தை இப்பொழுது இச்சங்கமடைந்திருக்கிறது. இப்பொழுது நீங்கின இளமைப்பருவத்தில் நம் சங்கம் செய்துவந்த பெருங்காரியங்கள் எத்துணையென்பது இச்சங்கத்தால் வெளியிடப்பட்டுவருகிற செந்தமிழ்ப் பத்திரிகையாலும், சங்கம் பதிப்பித்துள்ள அரிய நூல்களாலும் இனிதறியக்கிடக்கின்றது. ‘தமிழ் நாட்டாரது இக்காலவாழ்வுக்கு அநுகுணமானவறிவையூட்டச், சங்கம்முயற்சிசெய்யவில்லை’யென்றுசிலர் குறைகூறுவது கேட்டுள்ளேன். “செந்தமிழ்”ப் பத்திரிகை வாயிலாக வெளிவரும்விஷயங்களும், சங்கம் பதிப்பித்து வெளிவிட்ட நூல்களும் பொதுஜனங்கட்கு உபயோகமற்றனவென்றும், அதனால் சங்கத்தின் முயற்சிகள் தக்கவழியில் செலுத்தப்படவில்லை யென்றும் பழிகூறுவர் சிலர். ஆனால்

அன்று தின்ற ஊண் ஆறு மாசத்துப் பசியை அறுக்கும் : : அன்று கண்ட மேனிக்கு அழிவு இல்லை.

இத்தகையோர் மனக்காட்சி விசாலமற்ற
தென்றே சொல்லவேண்டும். சின்னாள்முன்
தமிழ்ப் பாஷை யடைந்திருந்த நிலைமையை
யும் தற்பொழுது அதற்கு இச்சங்கத்தின்
காரணமாய் உற்றிருக்கும் ஸ்திதியையும் கவ
னித்தால் இம்மாதிரிப் பழிக்கூற்றிற்கு இட
மிராது. சங்கமேற்பட்ட காலத்திற்குமுன்
தமிழ்க்கலைஞர் பலருமிருந்தனராயினும், அவர்
ஆங்காங்கு குடத்திலேற்றிய விளக்கைப்
போலப் பதுங்கிக் கிடந்தனர். தமிழபிமானி
களை ஒருவன் விரல்களால் கணக்கிடலாகும்.
பண்டைக்காலத்து வழக்கம்போல ஆசிரிய
னைத் தேடி மாணவர் கல்விகற்கப் போகும்
சம்ப்ரதாயம் இல்லாததால், நாட்டில் தமி
ழொளி மங்கலடைந்தே யிருந்தது. அக்கா
லத்து ஆங்கிலங் கற்றுவந்த ஆடவர் பெரும்
பான்மையரும் தமிழையுந் தமிழாசிரியனை
யும் அசட்டை செய்துவருவது வழக்கமா
யிருந்தது. 'அம்மையப்பிள்ளை'யை மாணவர்
கள் படுத்திய பாடுகள் யாரே அறியார்!
ஆகவே நாட்டில் நல்லாசிரியனை நாடித் தமிழ்
படிப்பாருமில்லை. பள்ளிக்கூடங்களில் பரீ
க்ஷைகட்காகக் கற்பிக்கப்பட்டு வந்த தமிழ்க்
கல்வியும் பயனொன்றும் விளைக்காது வீணே
முடிந்தது. தமிழ்ப் பாஷையின் கிளர்ச்சியுங்
குன்றிவந்தது. செல்வாக்கும் குறைந்தது.
இத்தகை யிடரி லகப்பட்டு வருந்தும் தமிழை
வளர்க்கும்பொருட்டே ஸ்ரீமான் பாண்டித்
துரைத் தேவரவர்கள் இச்சங்கத்தை நிறுவி
யது. சுவையிலுங் கவித்திறத்திலும் பொருள்
விளக்கு மாற்றலிலும் ஏனைய பாஷைகளுக்
குச் சற்றும் குறையாத, தொன்று தொட்டு
வழங்கிவரும் நம் ஜீவபாஷைக்கு ஜனங்களின்
அனாதரவா லேற்பட்ட தள்ளாட்டத்தைப்
போக்கி, அதற்கு உயிரும் வலியும் பெருக்கி,
அபிமானத்தோ டெல்லாரும் அதைக்கொண்
டாடி, மேன்மேலும் அதன் மேன்மை
யோங்க முயற்சிசெய்யத் தூண்டி வருவது
இச்சங்கமன்றோ! இப்பேரவையிற் பண்
டித சிகாமணிகளும் தமிழபிமானிகளும்
ஒருங்கே கூடியிருக்கும் இவ்வானந்தக்காட்சி,
பதினைந்து வருடங்கட்கு முன் காண்ட
லெத்துணை அரிதாயிருக்குமென்பது சொல்ல
வும் வேண்டுமோ? தமிழ் ஏற்கனவே வனப்புந்
திறமும் பெற்று, தென்இந்தியாவின் பூர்விக
நாகரீகத்திற்குச் சாதகமும் இருப்பிடமுமாகி
யிலங்கியதோடு, நாம் குழவிப்பருவமுதல் எங்
கும்யாண்டும் இன்பிலும் துன்பிலும் நம்தாய்ப்
பாஷையாகப் பயின்று வருதற்குரிய பாஷையா
யிருந்தும், சமீப காலத்திலேயே அதைச்சிரா
ய்ப்பேசுவதிலும்கற்பதிலும்பரப்புதலிலும்நாம்
ஆசைகொண்டவராய்க்காணப்படுகிறோம். இந்
தஸ்வபாஷாபிமானம் நம்மிடம் ஜனித்துவளர்
தற்கு இச்சங்கம்புரிந்த உதவி பெரிதேயாகும்.
இத்துடன் நில்லாது, அறிஞர் யாவரும் தம்மா
லீட்டப்பட்டுள்ள கலைஞானத்தைப்பலருமறிந்
துய்யச் "செந்தமிழ்"ப் பத்திரிகையில் வெளி
யிட இடங்கொடுத்துத் தமிழரின் ஞானப்பெ
ருக்கத்திற்கு ஏதுவாயும் நம் சங்கம் நின்றது.
பன்னாள் முன்னரே பதுங்கியொளித்த தொன்
னூல் பலவும் துலங்கப் பதித்துத் தமிழர்க்கு
மனமகிழ்ச்சி ஏராளமாய் ஊட்டி வந்திருக்கின்
றது. ஈண்டு வேறொரு விஷயமும் கவனிக்
கத்தக்கது. நம்பாஷையை மாணவர் மறந்திடச்
சர்வகாலசாலையார் வரையற்ற உபாயங்கள்
இப்பொழுது சிலவருடங்களாகச் செய்துவரு
கின்றனர். சின்னாள் முன்னர் ஆங்கிலக்கல்லூரி
களில் பெயருக்காவது தமிழ்ப்பாடங்கள் உயர்
தரப் பரீட்சைகட்கும் ஏற்பட்டிருந்தன. இப்
போழ்தோ அப்பட்டாங்கும் போய்விட்டது!
ஆங்கிலப் பயிற்சிக்குத் துணையாக லோஜர்மன்,
காதிக், முதலான பாஷைகளின் தத்வங்களை
யும் ரகசியங்களையும் படிக்க நேர்ந்த இவ்வவச
ரத்தில், மாணவர் நாட்டுப்பாஷையான தமிழை
யும் படிக்க அவகாசங் கிடைப்பது எங்ஙனம்?
அதுபற்றியே தமிழ் முதலிய தேசபாஷை
கள் சர்வகலாசாலைப் பரீட்சைகளினின்று
முழுதும் நீக்கிவிடப்பட்டன போலும்! நம்
மாணவர்களிடையில் தமிழ் நடமாடாதிருத்
தல் போதாதென்று நினைத்து, உருது அல்லது
ஹிந்திபாஷையை நாம் பேசும் பாஷையாய்ச்
செய்துகொள்ளவேண்டு மென்றும் ஆங்கிலங்
கற்ற அற்புதர் அநேகர் தற்பொழுது கூறுவது
முண்டு. பல்லாற்றானும் இங்ஙனம் நம் அரும்
பெறலன்னையாம் தமிழ்மாதை அலங்கோலப்
படுத்த முயன்றுவரும் இத்தருணத்தில், நம்
சங்கம் ஆதிமுதல் ஆங்கிலக் கல்விச்சாலை
களிற் படிக்கும் மாணவர்கட்குத் தமிழ்ப் பரீ
க்ஷைகள் ஏற்படுத்தி, விஜயிகட்குப் பரிசுகளு
மளித்து, தேசிய சிறுவரிடத்துத் தமிழின் சீர்

சிதையாமற் காத்து வருகின்றது. இவ்வருஞ் செயல்கட்குத் தமிழ் நண்பர் யாண்டும் சங்கத்திற்கு நன்றிபாராட்டுங் கடமைப்பாடுடையராவார்.

இளம்பிராயத்தில் நம் சங்கம் நிறைவேற்றியது வியக்கத்தக்கதேயாயினும், மேல் அதற்கு நேருங்கடமை சாலவும் பெரிதேயாகும். இக்காலத்தில் பிராசீநாட்டார்கள் தம்முள்கிளம்பியிருக்கும் தேசீய வபிமான எழுச்சியால் ஏற்பட்ட பலவிஷயங்களில் ஒரு முக்கிய விஷயம், தேசீய வித்யாப்பயிற்சி. நாகரீக நாடுகளென்று மதிக்கக்கூடிய நாடுகளுள் இந்தியா நீங்கலாக வேறெவ்வொரு நாட்டிலும் அத்தேசத்திய பாஷையிலேயே கல்வி கற்பது வழக்கம். நம் நாட்டில் மாத்திரம் தாய்மொழியைவிட்டுப் பிறமொழியில் கல்வி புகட்டி வருகிறார்கள். அன்றியும் இங்கு நிகழும் போதனா முறையும் விதேச முறையென்றே கூற வேண்டும். நம் நாட்டின் நன்மை வளர்ச்சிக்கு அம்முறையை மாற்றவேண்டுமென்ற எண்ணம் சென்ற சில காலமாக ஜனங்களின் மனதைப் பற்றியிருக்கின்றது. இவ்விஷயத்தை ஆராய்ந்துள்ளோர் யாவரும் நம் நாடு நலன் மிகப்பெற வேண்டுமானால், நங்கலாசாலைகளிலும் ஏனைய பள்ளிக்கூடங்களிலும் கல்விகற்கக் கருவியாக நடைபெறவேண்டியவை நம் நாட்டுச் செம்மொழிகளே என்கின்றனர். எவ்வாறு பழக்கமில்லா உணவைப் புகட்டினால் அது சீர்ணமாகாது தேகத்திற்கு அஹிதம் விளைக்கின்றதோ, அதுபோல பிறமொழிவழிக் கல்வி யூட்டப்பெற்றால் அது நமக்குரியதாய் நிலைத்துப் பயனளிப்பதில்லை என்பது அவர்கள் திண்ணமான கொள்கை. 'கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை' என்று கூறியது ஆங்கில மொழிவழிக் கற்கும் கல்வியை மாத்திரந்தானா உத்தேசித்துக் கூறியது? நம் நாட்டார் பலரும் ஆங்கிலத்தில் கல்வி பயில ஆற்றலற்றவர்களாயிருக்கிறார்கள். அவர்கட்குப் புத்தி நுட்ப மெவ்வளவுதான் இருந்தபோதிலும், ஆங்கிலம் பயில அளவில் ஊதியச்செலவு வேண்டிவருவதால், வறுமையின் கொடுமையால் ஆங்கிலவழி அணுகவும் அவர்களால் முடியாது. அதனால் தேசியபாஷையில் கல்விகற்கு முறை ஏற்படாவிட்டால், நம்மவர்பெரும்பான்மையரும் அறிவினொளியற்றவராய்ப் பூதேவிக்குப் பாரமாய் முடிவர். "ஒரு மனிதனை அவன் வித்யாதனம் பெறுதற்குமுன்னிருந்ததைவிட மிகச்சிறந்த வேலைக்காரனாக்குவதற்கு மாத்திரமன்று; அவனை முன்னினும் மிக்க நலம் பொருந்தியவனாக்கவும் நாம் கல்வி ஆவசியகமென்று தேர்ந்துரைக்கின்றோம்" என்றார் ஸர் ஜான் லபக்கென்ற ஆங்கில கலைஞர். மனிதனுக்கு நலமளிக்குங் கருவி கல்வியேயாகும். பற்பல விஷயங்களை ஆய்ந்தறிந்து, நற்குண நற்செய்கைக ளமையப்பெற்று, பௌதிகம், மானஸிகம், ஆமுஷ்மிகம் ஆகிய எல்லாக் காரியங்களிலும் செவ்வனே ஒழுகுதற்குக் கல்வி யின்றியமையாத ஸாதனமாகும். நம் நாட்டு ஜனசமூகம் பொதுவாய்க் கல்வியின்பயனடைந் துய்யவேண்டுமானால், நம்பால் இயற்கையிலேயே அமைந்துள்ள நம்முன்னோர் விளக்கிய உயர்ந்த வுண்மைகளைத் தெற்றன விளக்கும் தேசியபாஷையில் கல்வியெய்தப் பெறவேண்டும். ஒருதேசத்தாராவது தம் நாட்டுப்பாஷையாலன்றி வேறொருஸாதனத்தாலும் ஒருபொழுதும் உண்மையாக நாகரீகத்தையும் கல்வியையும் பெற்றிலர் என்பது சரித்திர வாராய்ச்சியால் விளங்கும். ஒரு ஜாதியாரின்ஒற்றுமை வளர்ச்சிக்கு, அவரது மொழியும், அம்மொழியிலமைந்த நூல்கள் விளக்கும் அரும்பெரும் போதனைகளும், அவர் அப்போதனைகளின் பயனாய்க் கைகொண்டனுட்டித்துவரும் ஒழுக்கங்களும் உதவிக்கருவிகளாய் ஏற்படும். நம்மவர் முற்பட்டுயர ஆங்கிலம் போன்ற விதேசபாஷையின் அறிவால் அதிகம் பலன் விளையுமென்று நினைத்தல் பிழையாகும். ஆங்கில ஸாம்ராஜ்யத்தினது பற்பல அங்கங்கள் தம்முள் ஐக்யமுற்று, அவற்றின் பரஸ்பர ஸஹவாஸத்திற்கு எத்துணையோ ஆவசியகமாகும் ஆங்கிலமொழியின் உபயோகத்தை யான் குன்றக் கூறவில்லை. ஆனால் ஒரு ஜாதியார்க்கு உரியனவான உயர்ந்த மனோபாவங்களும் உத்தம உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய உண்மைகளும் உபதேசங்களும் அவர்களாண்டுவரும் ஸ்வபாஷையில் முன்னர் அமைக்கப்பெற்றன போல இன்னும் அமைக்கப்பெற்றால் மாத்திரமே பயன் பெறுவனவாம். ஒவ்வொரு நாட்டுமக்கள் திட்சிக்கும் ஏனைய நாட்டுமக்கள் தொகுதிகட்கில்லாத சிறப்புக் குணங்கள் உள்ளனவாகையால், வையகத்தின் அறிவு விசா

அன்றற ஆயிரம் பொன்னினும், நின்றற ஒரு காசு பெரிது :: அன்புள்ள குணம் அலையில்லா நதி.

லத்திற்கும் நல்லொழுக்கப் பெருக்கத்திற்கும் நல்வளர்ச்சிக்கும் நாகரீகக்கிளர்ச்சிக்கும், அவ்வம்மக்கள் தொகுதியும் அவரவர்க்குரிய விகிதம் உதவவேண்டும். அம்மாதிரி நம்மவரும் உதவ வேண்டுமானல், நம் தாய்மொழி வளர்ச்சியாலேதான் அவரினின்று அவ்வுதவி உலகம் பெறும். நம்நாட்டு எல்லா மக்கட்கும் ஆங்கிலங் கற்றுத் தேர்தலியலாது. அவ்வா றியன்றாலும் அம்மொழியின் இயல்புக்கு முற்றிலும் மாறாகும் நம்மவர் கருத்துகளைத் தெரிவித்தற்குரிய இயற்கைக் கருவியாய் அப்பாஷை ஒருகாலு மமையாது. இக்காரணத்தாற்றான் ஒவ்வொரு திறத்தாரின் வித்யாபிவிருத்திக்கும் அவ்வவரது தாய்மொழியே கருவியாகவேண்டுமென்று சாதிப்பது. தாய்மொழியிற் கல்வி கற்றால்தான் அக்கல்வி அம்மொழியாளர்க்கு நிலையுற்ற வுடைமையாகும். அக்கல்வியே கற்றவர்க்குக் கேடில்விழுச் செல்வம். அவ்விதங் கற்ற கல்வியே ஒருவ னுயிரிடத்தே தங்கி 'எழுமையு மேமாப் புடைத்து'. அதனால்,

> விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்

என்ற திருக்குறளின் கருத்தை யறிந்து, நந்நாட்டில் மனிதப் பிறப்பைக் கடவுள் கிருபையாற் பெற்றவர் மிருகங்களாகத் திரியாமலிருக்க, நம் தாய்மொழி வாயிலானேவறியோரும் கல்வியும் அதினின்று விளையும் அறிவும் பெறற்கு இச்சங்கமும் சங்கத்தினங்கத்தினர்களும் விடாமுயற்சி செய்யவேண்டியது முக்கிய கடமை என்று கூறவேண்டும்.

தமிழ் மொழி வாயிலாக இக்காலத்திற்கேற்ற கல்வி பயிற்ற முடியாதென்று சாதிப்பார் கூறும் ஓர் முக்கிய ஆக்ஷேபம் தமிழ்ப் பாஷையில் சாத்திரக் கலைகள் கற்றற்கேற்ற பாட புத்தகங்களில்லாமையும் வேண்டிய புத்தகங்களியற்ற முடியாமையுமாம்! வேண்டிய புத்தகங்கள் தமிழில் ஏறப்படவில்லையென்பது மெய்யே; ஆனால் தேசியபாஷையிலேயே, கல்விகற்பித்தலில் ஊக்கஞ்செலுத்தி முயன்றால் புத்தகங்களோ ஏற்படா! படிப்பவருளரேல், பாடபுத்தகங்கள் முறையேதோன்றும். இவ்விஷயத்தில் ஜப்பான் தேசம் நமக்கு நெறிகாட்டும். சகல நூல்களும், சாத்திரங்களும் ஜப்பான் பாஷையிலேயே போதிக்கப்படவேண்டுமென்ற உத்தேசத்தோடு கௌண்ட் ஒகூமா என்ற ஜப்பானிய பிரபு 1882-ல் வஸிடா ஸர்வகலாசாலை ஏற்படுத்தினர். போதிய பாடபுத்தகங்களில்லாமையால் நேருங்கஷ்டத்தை நீக்குவானென்றே அக்கலாசாலையில் ஓரச்சுயந்திரசாலை அமைத்துத் தக்கபுத்தகங்கள் வரையச்செய்துபதிப்பித்தார். அங்கு சகல மேனாட்டுச் சாத்திர அறிவையும் மாணவர் ஜப்பான்பாஷை வாயிலாக இப்பொழுது பெறுகின்றனர். அக்கலாசாலையில் இப்பொழுது 180போதகாசிரியர்களும் 7000 மாணவர்களுமுளராம். ஐம்பது வருடங்கட்குமுன் ஜப்பான் பாஷையின் நிலைமை நம்நாட்டில் நம்மொழிகள் இப்பொழுதடைந்திருக்கும் நிலைமைக்குச் சற்றேனும்மேலதாயிருக்கவில்லை. இந்தியாதேசத்தும் ஹரித்துவாரத்துள்ள குருகுலத்தில் உயர்தரக் கல்வி தேசீய பாஷை யொன்றில் செவ்வனே பயிற்றப் பெற்றுவருகிறது. பரோடா ராஜ்யத்தில் "கலாபவன்" என்ற கைத்தொழிற் பாடசாலையில் சாத்திரங்களைத்தும் ஸ்வபாஷையிலேயே கற்பித்து வருகின்றனர். பூனா நகரத்தில் சமீபத்தில் ஏற்படுத்தப்பெற்ற ஸ்த்ரீ வித்யாலயத்தும் அவ்வாறே முயன்று வருகின்றனர். அஃதற்றாக, தமிழில் உயர்தரக்கல்வி பயிற்றல் முடியாதென்ற கூற்று வீண்கூற்றே யன்றோ? நந்தமிழில் இற்றைப்பொழுதே அரும் பெருநூல்கள் அளவிலாதமைந்துள. 'சுதேசமித்திரன்' போன்ற தினசரி பத்திரிகைகளும் 'விவேக போதினி' 'விவேக சிந்தாமணி' போன்ற நற்றமிழ் மாசிகைகளும் நாடெங்கும் நடைபெற்று, சமயோசிதம்போல சொற்றொடர்களமைத்துத் தமிழ் மொழியைப் பெருக்கி வருகின்றன. இத்தகை இருநிதி தமிழகத்திற்குக் கிடைத்திருக்க, அந்நியம் நம்முன்னோர்கட்குக் கல்வித் தேர்ச்சியு நாகரீகமு மடைய பெரிய வோர் கருவியாய் நின்றதுபோல, நம்பின்னோர்கட்கும் அவ்வாறு பயன்படுமாறு நம்மால் போற்றப்படாவிட்டால், நாம் நம் புதல்வரின் பழிமொழிக் காளாக வேண்டும். அதனால் இக்காலத்திய கல்வி முறைக்கிசைந்த பாடங்கள் படித்தற்குத் தக்க புத்தகங்கள் தமிழிலெழுதப் பெறவேண்டும். இதற்கு ஆங்காங்குத் தனித்தனியாய் ஒவ்வொருவர் உழைத்தால் போதாது. நந்தேச வளர்ச்சிக்கு வேண்டும் விஷயங்கள் ஒவ்வொன்றையும் நம் பாஷை

8382

யில் விளக்கிப் புத்தகங்களெழுத இச்சங்கமேற்பாடு செய்யவேண்டும். மேனாட்டுச் சாத்திரங்களையும் ஏனைய படித்தற்குரிய விஷயங்களையும் தென்மொழியில் செவ்வனே கைம்மாறு கருதாமல் எழுதி யுதவுதற்குப் "பயன்றூக்கார் செய்தவுதவி நயன் றூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்ற குறளையுணர்ந்த மிக்கோர் ஏற்படாராயின், அத்தகைப் புத்தகங்களெழுதவல்லார்க்குக் கைம்மாறாக நன்கொடை யாதேனு மளிக்க நிதியொன்று ஏற்பட்டால் புத்தகங்கள் எளிதில் வெளிவரும். இப்புத்தகங்கள், இப்பொழுது ஆங்கிலத்தில் Jack's People's Books என்றும் Home Library Series என்றும் பெயர்கள் வழங்கும் புத்தகத் தொகுதிகளில் வெளியிடப்படும் புத்தகங்களைப்போல எழுதப்பெற்று இச்சங்கத்தால் நியமிக்கப்படும் சில பிரபல வித்வான்களுடைய பொது மேற்பார்வையில் பிரசுரஞ் செய்யப்பட வேண்டும். இராஜாங்கத்தாரும் சர்வகலா சங்கத்தாரும் நம்பாஷையின் மேம்பாட்டிற்காகச் சிரத்தை காட்டினாலன்றிப் பாஷாவிர்த்திக்கு வழிகள் ஏற்படுதலிலகுவன்று என்று நீவிர் நினைப்பீர்களானால், ராஜாங்கத்தார்க்கும் கலாசாலையார்க்கும் ஊக்கம் இவ்விஷயத்தில் உண்டாகும்படி செய்ய வேண்டுவது நம் தமிழ்ச் சங்கத்தின் கடமையாகும். ஆனால் தமிழ் முதலிய தாய்மொழிகளை ஆதரிப்பதில் சென்னைச் சர்வ கலாசங்கம் எவ்வளவு முன்னின்று முயன்று வருகிறதென்பதை நினைக்குங்கால், சர்வ கலா சங்கத்தின் உதவி ஏற்படுமோவென்று ஐயமுற இடமுண்டாகின்றது. அது எவ்வாறாயினும் நம் சங்கத்தின் பொறுப்புச் சற்றும் மாறாது. சின்னாட்கட்குமுன், உர்தூ சர்வ கலாசாலை ஏற்படுத்தக் கருதி மாட்சிமை தங்கிய நிஜாம் கோமான் அக்கருத்து நிறைவேறுதற் பொருட்டு, உர்தூ பாஷையில் தக்க புத்தகங்கள் வரைதற்குப் புலவர்குழாம்நியமித்திருக்கின்றனர். நமது ஆந்த்ர சகோதரர்களும் வங்காள மாகாணத்தார்களும் மேனாட்டுச் சாத்திரப்பயிற்சிக்கும் ஏனைய நவீனகலைத்தேர்ச்சிக்கும் பயன்படத்தக்க புத்தகங்கள் அவரவர் தாய்மொழியில் எழுதிவருகின்றனர். முற்காலத்தில்ஞானமார்க்கத்தைநாடிவீடுபெற முயன்ற நம்முன்னோர் லௌகிக கலைகளையும் நன்கு கற்றுவந்தனர். பொருளும் இன்பமும் புருஷார்த்தம் நான்குள் அடங்கியிருத்தலே அதற்குப் போதுமான சான்றாகும். லௌகிக கலைகளுள் இயற்கைச் சாத்திரங்களும் வளர்க்கப்பெற்று வந்தனவென்பது Hindu Achievement in Exact Sciences என்ற தலைப்பின் கீழ் இப்பொழுது மாடர்ன் ரிவ்யூ என்ற மாசிகையில் வெளிப்படுத்திவரும் விஷயத்தாலும், 'டாக்டர் ப்ரோஜேந்திரநாத சீலர் என்ற பேரறிஞர் எழுதிய 'ஹிந்துக்களின் சக்தி தத்வ சாஸ்திரம்' (The Physical Science of the Hindus) என்றும் 'ஹிந்துக்களின் உண்மை இயற்கைத் தத்துவ சாஸ்திரங்கள்' (The Positive Sciences of the Hindus) என்றும் பெயர்கள் புனைந்த அரிய நூல்களாலும் நன்கு விளங்கும். ப்ராசீன சாத்திரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் தமிழ்மொழியில் விளக்குதல் சாத்தியமோவென்று ஐயுறுவார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையவர்கள் செய்த "நூற்றொகை விளக்கம்" என்ற அருமையான நூலை வாசித்திரார் போலும். எவ்வகை முயற்சியையும் பயனறச் செய்வது ஐயுறுதலே யாதலால், ஐயந் தெளிந்து, நம் பாஷையின் ஆற்றலைப் பெருக்கித் தேசீய வித்யாப்யாசத்திற்கு வேண்டும் புத்தகங்கள் ஏராளமாய் எழுதியுதவக் கடன்பட்டவராவார் ஆங்கிலங்கற்ற தமிழர். இவ்விஷயமாக நம் சங்கத்திற்கேற்படும் பொறுப்பின் நிறைவேற்றம் அன்னோரையே சார்ந்ததாகும். அன்னோர்பயின்ற ஆங்கில வித்தைக்கு வேண்டிவந்த தனச்செலவில் அற்பபாகமன்றோ அவர் கைப்பொருளினின்று செலவானது? அஃதவ்வாறாக, அன்னோர் நலமடைய ஊதிய முதலிய ஊரார்க்கு நன்றிசெலுத்த வித்யாதனத்தை ஊரார்மாட்டு விநியோகஞ் செய்தலினுஞ் சிறந்த மார்க்கம் என் சிற்றறிவுக்குத் தோன்றவில்லை. ஸ்ரீமான் ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யரவர்கள் "செந்தமிழ்" வாயிலாய் இவ்விஷயத்தில் உழைத்து வருவது மிகவும் மெச்சத்தக்கது. நிற்க, நாம் மேம்பாடடைய சாத்திரப் பயிற்சிமாத்திரம் போதாது. நம்மவர்க்குத் தொன்று தொட்டுரியதாய் நிற்கும் இயற்கை நலங்களும் அநுபவ சித்திகளும் பரக்கவிளக்கும் ஆன்றோராக்கிய அரிய பெரிய நூல்களைக் கற்றறித

லும் இன்றியமையாததாகும். ஒளித்தோடிய ஓலைச்சுவடிகளைக் கண்டுபிடித்துக் காலப்போக்கையும் பொருட்செலவையும் சற்றுங் கவனியாது, விடாவாராய்ச்சி செய்து, தீர்க்க காலமாய்த் தொன்னூல் பலவும் பதிப்பித்து, படிப்போர் மனதிற்கு மகிழூட்டி நல்லிசை பெற்றிலங்கும் புலவர் பெருமானாகிய மகாமகோபாத்யாய ஸ்ரீமான் சாமிநாதய்யரவர்கள் தமிழகத்திற்குப் புரிந்துவரும் பேருதவியை இங்கு வியந்து கூறற்பாலது. நம்பண்டித சிகாமணி வெளிப்படுத்தும் பண்டைத் தமிழ் நூல்கட்கு வரைந்துள்ள ஆராய்ச்சி முகவுரைகளே நவீனக்கருத்துக்களை நயம்பட விளக்குமாற்றல் நந்தமிழ் மொழிக்குளதென்பதைப் புலப்படுத்துகின்றன. இலக்கியப் பயிற்சியோடு சரித்திரப் பயிற்சியும் லௌகீக வாழ்க்கைக்கு மிக்க உபயோகமுள்ளதாகும். சரித்திர நூல்கள் நம் பாஷையிற் சற்றுமில்லையென்ற பெருங்குறை நிலைத்து நிற்கின்றது. அதை நீக்குவதும் நங்கடமையாகும். பண்டைக்கால முதல், உயர்ந்த நாகரீகமும் யாவரும் வியக்கத்தக்க சொற்சுவை பொருட்சுவை நிறைந்த சிறந்த இலக்கியமும் பெற்று விளங்குவதும், புலவர் பலரால் புகழ்ந்து பாடப் பெற்ற முடிமன்னர்களால் ஆளப்பட்டு வந்ததுமான தென் இந்தியாவின் சரித்திரம் இதுகாறு மெழுதப்படவில்லை. 'கரிகாலச் சோழன்,' 'சேரன் செங்குட்டுவன்,' 'வேளிர் வரலாறு,' 'சோழவம்ச சரித்திரம்' என்பன நம்மவர் சரித்திர வாராய்ச்சிசெய்ய ஆற்றலுடைய ரென்பதை நன்கு விளக்கும்.

ஒருவன் உண்மையில் நல்லறிவடைந்து நலம்பெற விரும்பினால், அவன் சாஸ்திர நூல்களில் சிறிதேனும் அறிவும், இலக்கியத்திலும் சரித்திரத்திலும் சாமானியப் பயிற்சியும்உடையவனாதல் இன்றியமையாததாகும். நந்நாட்டில் அறிவும் நலனும் ஒழுங்குறப்பெருக நம் சங்கத்தினரெல்லோரும் ஊக்கமும் ஒற்றுமையும் பொருந்த வுழைத்தல் வேண்டும். தேசநலன் விளைத்தற்கு எத்தனையோ வழிகளுள. நாடுவோர்க்கு அவை எளிதில் தென்படும். ஆனால் உழைக்க இச்சையும் சங்கற்பமுமே வேண்டியவை. நம் நாட்டில் நல்லறிவு பரவ, பலருமொருங்கே முயற்சிசெய்தால்,

ஆக்க மதர்வினாய் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை

என்ற தேவர் வாக்கிற்கிணங்க, காரியசித்தி நிச்சயமாகப் பெறுவோம். மன ஊக்கத்தோடு உண்மையாய் உழைப்பவன் வழி நலமெப்பொழுதுஞ்சேரும், என்று கார்லைல் என்ற ஆங்கில ஆசிரியருங் கூறுகின்றார். வள்ளுவனாரின் கூற்றுமஃதேயன்றோ?

உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று

என்ற குறளால் ஊக்கத்தின் பெருமையுஞ் செவ்வனே விளங்கும்.

சீரியர்காள்! பண்டிதசிகாமணிகள் நிறைந்த இச்சபையில் புதிதாய் நான் கூறக்கூடியதொன்று மிலதேயாயினும், சிற்சில வமயங்களில் யாவரும் நன்றாயறிந்த சில விஷயங்களை வற்புறுத்திக் கூறுதலால் நற்பயன் விளைவது நம்மனுபவமானதுபற்றி, நான் இவ்வார்த்தைகளை இங்குமொழியத் துணிந்தேன். என் புன்சொல்லைப் பொறுமையுடன் நீங்கள் கேட்டதற்கு வினயத்துடன் வந்தனம் சமர்ப்பிக்கின்றேன். ஆலவாயரன் திருவருளால் நம் மதுரைத் தமிழ்ச்சங்கம் "ஆநாணிறைமதியலர்தரு பக்கம்போனாளினாளின்" நல்லொளி பரப்பித் தமிழகத்திற்குப் பயன்பட் டோங்கி வளரக்கடவது!

---

## ஸ்ரீராமாயண ஸாரம்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் முதல் ஐந்து காண்டங்களின் கதையை ஸாரமாகக் கொண்டது. எளிய நடையில் இருபாலார்க்கும் உபயோகமாகும்படி இனிய தமிழில் இடை இடையே கற்பனை பொதிந்து விளங்கும்படி எழுதப் பெற்றது. இதில் முதலில் எழுதப்பட்டுள்ள பிரவேசம் என்னும் பாகத்தில் ராமாயண நூலின் ஆதாரம், இயற்கை, மகிமை, படிப்பினை, குண விமர்சனம் முதலிய விஷயங்கள் அழகாய் யாவர் மனத்திலும் பதியும்படியாகக் காட்டப்பட்டுள்ளன. * * * *

கம்பராமாயணச் செய்யுட்களைத் தலைமகுடமாகக் கொண்ட இப்புத்தகம் அழகிய படங்களுடன் விளக்கப்பட்டு நன்றாக அச்சிடப்பட்டுள்ளது. இதைப் பள்ளிக்கூடங்களில் பலவிதமாயும் உபயோகபடுத்தலாமென்பது எமது திடமான நம்பிக்கை. கல்வி இலாகா அதிகாரிகள் பாடப் புத்தகங்களில் ஒன்றாக இதைச செய்வது வெகு சிலாக்கியமாகும்

விலை ரூபா ஒன்று சந்தாதாரர்க்கு அணா 12.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

---

அன்பற்ற மாமியாருக்குக் கும்பிடும் குற்றந்தான் : அன்பான சிநேகிதனை ஆபத்திலே அறி.

# சமுத்திரகுப்தன்

## SAMUDRA GUPTA

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் மலையும் காடுகளும் நெருங்கிய தேசங்களின் வழியாகச் செல்லவேண்டியிருந்ததால் சேனைக்கு வேண்டிய உணவு முதலிய பொருள்களைக் கூடவே அனுப்புவது கஷ்டசாத்தியமாக விருந்தது. இப்போதோ, இவனது சேனை சமபூமியை அடைந்து விட்டதால், எல்லாம் சமுத்திரகுப்தனுக்கு அநுகூலமாக விருந்தன. கிழக்குத் தீரத்திலுள்ள பெருவழி மூலமாகச் சென்று கலிங்கநாட்டுத் தலைநகராகிய பிஷ்டாபுரத்தை யாண்டுவந்த சிற்றரசனை முறியடித்து மகேந்திரகிரி, கோட்டூரா மலையரண்களைக் கைப்பற்றிக்கொண்டு கொல்லேரி சமீபத்தில் ஆண்ட மாந்தராஜாவையும், வெங்கியையாண்ட பல்லவனையும், காஞ்சியையாண்ட விஷ்ணுகோப பல்லவனையும், பாலக்காவையாண்ட உக்கிரசேன பல்லவனையும் புறங்கண்டு தக்ஷிணத்தின் மேற்றிசை வழியாகத் தன்னாடு நோக்கித் திரும்பி, வழியிலுள்ள தேவராஷ்டிரம், ஏரண்டபள்ள முதலிய நாடுகளையும் ஜெயித்துக்கொண்டு, முடிவில் தன் நகர் சேர்ந்தனன்.

இவ்வரிய செயல் யாவருக்கும் வியப்பைத் தருமென்பதற்குத் தடையொன்றுமில்லை. இவன் சென்று வந்த சுமார் 3000 மைல் தூரமிருக்கும்; படைகள் சென்ற வழிகளோ பயங்கரமான மலைவழிகளும் அடர்ந்த காட்டு வழிகளுமாகும். இப்படை எழுச்சி சுமார் 2,3 வருஷங்கள் பிடித்திருக்கும். தென்னாடுகளைக் கைப்பற்றி ஆளவேண்டுமென்ற எண்ணம் அவன்மனதில் இராதென்பது உண்மை. இது இயற்கையில் அந்நாளில் அசாத்தியமாகும். செங்குட்டுவன்போன்ற சில தென்னரசர்கள் வடநாடுகளைப் படையெடுத்துக் கொள்ளை கொண்டது போலவே, இவனும் தென்னாட்டைக் கொள்ளையிடக் கருதிப் படையெடுத்துச் சென்றான். இவன் கொண்டு வந்த திறைப்பொருள்களும் கொள்ளைப் பொருள்களும் அளவிறந்தனவாகும். அப்போது பாடலீபுரம் பொற்குவியல்களால் பொலிவு பெற்றது.

இனி இவன் தன்னாட்டின் எல்லைப் புறத்துள்ள நாடுகளையும் குடியரசுகளையும் வென்றதைப்பற்றிக் கூறுவோம். இவைகளைப்பற்றிக்கூறும் சாஸனத்தால் சமுத்திரகுப்தன் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின் நான்கெல்லைகளும் நன்கு விளங்கலாகும். கிழக்கேயுள்ள சமதாடம், காமருபம், தேவாகம் முதலிய நாடுகள் அவனுக்குத் திறைகொடுத்தன. வடக்கேயுள்ள நேபாள தேசம் தனது சுதந்திரத்தை இழக்காமலே சமுத்திரகுப்தனுக்குக் கீழிருந்து வந்தது. இமயமலை அடிவாரம் வரையில் இவனது கோராட்சி சென்றிருந்தது. கர்தூரிபுரதேசமும் அவ்வாறே இவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தது.

பாஞ்சாலம், கீழ் இராஜபுதனம், மாளவம் இவைகளில் குடியரசு நாடுகள் தழைத்தோங்கின. யாதேய கிளையைச் சேர்ந்தோர் ஷடத்ரு நதிக்கரை இருபுறமும் குடியேறியிருந்தனர். மாத்ரகக் கிளையினர் பாஞ்சால மத்தியில் குடியேறி யிருந்தனர். இவன் காலத்திலிருந்தது போலவே, அலக்ஸாண்டர் காலத்திலும் இந்த ப்ராந்தியத்தில் குடியரசு நாடுகள் பல இருந்தன. யமுனை நதிதான் சமுத்திரகுப்தன் ராஜ்யத்திற்கு வடமேற்கு எல்லை. அர்ஜுனயனர், மாளவர், அபீரர் முதலியோர் கீழ்இராஜபுதனத்திலும் மாளவத்திலும் வாழ்ந்துவந்தனர். ஆதலின் சம்பல் நதியே இப்பாகத்தின் எல்லை என்று சொல்லலாம். நர்மதை யாறு இவன் நாட்டிற்குத் தெற்கெல்லையாக விருந்தது.

மேற்கூறிய நான்கெல்லைகளிலிருந்து சமுத்திரகுப்தனது இராஜ்யம் வட இந்தியாவிலுள்ள வளமுள்ள நாடுகள் அனைத்தையும் தனக்குள் கொண்டிருந்ததென்று நாம் அறிந்து கொள்ளலாம். வடக்கே இமயமும், தெற்கே நர்மதை யாறும் கிழக்கே ஹூக்ளி நதியும் மேற்கே சம்பல் நதியும் அவனது நாட்டின் எல்லைகளெனலாம். இவற்றிற்குப் புறம்பேயுள்ள நாடுகளும் இவனுக்குக் கீழ்ப்பட்டன வென்று கூறினோம். தென்னாட்டிலுள்ள தேசங்களும் இவன் படை எழுச்சிக்கு முன்னர்த் தாழ்ந்து பணிந்தன.

அசோகனுக்குப் பிறகு 600 வருஷகாலமாகப் பரதகண்டத்து முடிமன்னர்களெல்லாரும் ஒரே அரசனுக்கு முடிதாழ்ந்ததில்லை.

இவ்வண்ணமாய் வேற்றரசர் யாவரையும் பரத கண்டத்திலுள்ளதன் ஆட்சிக்குக்கீழ்க்கொண்டு வந்ததைக் கேட்ட அயல்நாட்டு வேந்தர்கள் இவனது நட்பை வேண்டினார்க ளென்பது சொல்லாமலே அமையும். இவனோடு இவ்வாறு உறவு கொண்டவருள் முக்கியமானவர்கள் காந்தார தேசத்தரசனும், ஆக்ஸஸ் நதிக்கரையில் ஆண்டுவந்த குஷான் வம்சத்தரசனும், இலங்கை வேந்தனும் ஆவர். இன்னும் பிற வேந்தரும் உறவுகொண்டனர் என்பர்.

இலங்கை வேந்தனுடன் இவனுக்கு நட்பு அகஸ்மாத்தாய் ஏற்பட்டது. கி. பி. 330-ல் மேகவர்ணன் என்ற பௌத்தவரசன் இலங்கையை ஆண்டுவந்தான். அவன் பௌத்த சந்நியாசி இருவரைப் புத்த கயைக்கு அனுப்பி அங்குள்ள வஜ்ஜிர பீடத்தைத் தரிசித்து, வட விருக்ஷத்திற்குக் கீழ்பால் அசோக மகாராஜனால் கட்டப்பட்ட பௌத்த ஆசிரமத்தையும் கண்டுவரும்படி ஏவினான். இவ்வாறு அனுப்பப்பட்ட இருவருள் ஒருவர், மேகவர்ணராஜனது சகோதரர். இவ்விருவரும் வடஇந்தியாவுக்கு யாத்திரை சென்றனர். ஈழ பௌத்தர்களுக்கும் இந்திய பௌத்தர்களுக்கும் உள்ள ஆசார வேறுபாடுகளால், இவர்களை இந்திய பௌத்தர்கள் புறக்கணித்து விட்டனர். சென்ற விடங்களில் எல்லாம் இவ்விதம் உபேக்ஷை செய்யப்பட்ட செய்தியை அவர்கள் தம் அரசனுக்குத் தெரிவித்தபோது, அவனும் தன் நாட்டிலிருந்து பௌத்த ஸ்தலங்கட்கு யாத்திரையாகச் செல்லும் ஜனங்கள் வேண்டிய சௌகரியங்களைப் பெறுவதற்காகப் புத்தகயையில் ஒரு ஆசிரமம் ஏற்படுத்த எண்ணி, சமுத்திரகுப்தனுக்கு ஒரு தூது போக்கினான். தூதுவர் தனக்குக் காணிக்கையாகக் கொணர்ந்த அரதனப் பொதியை இலங்கை வேந்தனது திறையாக மதித்து மிக்கக் களிப்புடன் மேகவர்ணனது வேண்டுகோளுக்கு, சமுத்ரகுப்தன் உடன்பட்டான். மேகவர்ணனும் வடவிருக்ஷத்திற்கு வடபால் ஒரு திவ்யமான கட்டிடத்தைக் கட்டுவித்து, தன் கருத்தை ஓர் செப்பேட்டில் வரைந்து பிரசுரப்படுத்தினான். அக்கட்டிடம் மூன்று மாடிகளோடு கூடிய உன்னதமான மாளிகை. ஆறு கூடங்களும் மூன்று கோபுரங்களும் அதில் அமைந்திருந்தன. அதைச்சுற்றிலும் 40 அடி உயரமுள்ள பலத்த மதில்கள் எடுக்கப்பட்டன. அதில் சித்திர வேலைகள் மிகவும் ரம்மியமாகவும் திறமையாகவும் கண்கவரும்படி தீட்டப்பட்டிருந்தன. அங்கு எழுந்தருளப் பண்ணியிருந்த புத்த விக்கிரகம் பொன்னாலும் வெள்ளியாலும் வார்க்கப்பட்டு மணிகளால் இழைக்கப்பட்டிருந்தது. புத்தரது ஞாபகச் சின்னங்கள் அடங்கிய மற்றைய ஆலயங்களும் இதேவிதமான வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டன.

ஏழாம் நூற்றாண்டில் ஹியூன் த்ஸாங் இந்தியாவுக்கு யாத்திரையாக வந்தபோது இந்த மடத்தில் மகாயனத்தில் ஸ்தவீர வகுப்பைச் சேர்ந்த 1000 சந்நியாசிகள் வசித்து வந்ததோடு, இலங்கையிலிருந்து வரும் யாத்திரிகருக்கு அவர் வேண்டிய சௌகரியங்களையுஞ் செய்துவந்தனர்.

சமுத்ரகுப்தன் தென்னாடுகளைப் படையெடுத்துக் கொள்ளைகொண்டு திரும்பியவுடன், துரங்கவேள்வி ஒன்று இயற்றினான். இவ்வேள்வி பண்டைநாளில் திக்குவிஜயம் செய்து பரதகண்டத்தை ஒரு குடைக்கீழ் ஆண்ட உத்தம வீரர்களால் நடத்தப்பட்டு வந்தது. மோரிய வரசை வீழ்த்திவிட்டுச் சுங்க வம்சத்தை நாட்டிய புஷ்யமித்திரன் ஒரு துரங்க வேள்வி இயற்றினான். அவனுக்குப் பின்பு (184. கி. மு.) இது நின்றுபோய் விட்டது. இப்போது இதை வெகு விமரிசையாகச் சமுத்திரகுப்தன் நடத்தினான். அத்தருணம் நான் மறையோர்களுக்குப் பொன்மாரி சொரிந்தனன். இத் தருணத்தில் அவன் அடித்து வழங்கிய பொன்காசுகளிற் சில, இப்போது அகப்பட்டுள்ளன. அதில் ஒருபுறம் சில எழுத்துகளும் மற்றோர் புறம் யாகக் குதிரையின் உருவமும் வரையப்பட்டுள்ளன. ஒரு கற்குதிரையும் அதனடியில் சுருக்கமான சிலா லிகிதமும் சமீபத்தில், வட அயோத்தியில் கண்டெடுக்கப்பட்டு இப்போது லக்ஷ்மணபுரத்தின் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுவும் சமுத்திர குப்தன் இயற்றிய துரங்க வேள்வியின் ஞாபகார்த்தமாகச் செதுக்கப்பட்டதெனக் கருதுவதற்கு இடமுண்டு.

இந்திய ஸ்திரீ ரத்னங்கள்
திரௌபதி அணா 8 ருக்மிணி அணா 6
சகுந்தலை அணா 4

# வஸந்த மந்திரம்

(ஒரு சரித்திர சம்பந்தமான நவீனம்.)

(31-ம் பக்கத் தொடர்ச்சி)

சிற்ப நிபுணன் என்ற பெயர் அவனுக்குத் தகும். ஏனெனில், தக்கசைலம், பாடலீபுரம், கூர்ஜ்ஜரம் முதலான இடங்களிலுள்ள பல புத்தமடங்களையும், கோவில்களையும், மற்ற சித்திரசாலைகளையும் தானே நேரே பார்த்து அவ்விதம் வேலைசெய்யக் கற்றுக் கொண்டவன். அவனிடம் வேலை செய்யப் பல யவனர் வந்து கூடினர். சிற்ப நிபுணனிடத்தில் வேலை செய்கிறான் என்பதே சிற்பிகளுக்கு ஒரு கௌரவம் என்றால் அவன் சாமர்த்தியத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! பாக்ஷாவிடம் தோல்வியடைந்து இராஜ்யம் இழந்த ஹிந்து அரசனுக்குப் பல மண்டபங்களும் அரண்மனைகளும் நிருமித்துக் கொடுத்தவன் இவனே. அவற்றுள் பலவற்றை மகமதிய ஸேனை அழித்துவிட்டபோதிலும் மீதியுள்ளவற்றைப் பார்த்து மிகவும் ஸந்தோஷமடைந்த பாக்ஷா, தனக்கும் ஒரு வஸந்த மண்டபமும், அரண்மனையும் சிற்ப நிபுணனால் செய்து கொள்ள எண்ணங்கொண்டு, வஸந்தபுரியில் ஸ்வர்ண ஸரஸின் அருகில் வஸந்தமந்திரம் கட்டிக்கொடுக்கும்படி உத்தரவு செய்தான். பாக்ஷாவுக்குப் பாரசீகம், அரபி, ஸம்ஸ்கிருதம், இப்பாஷைகளில் கொஞ்சம் தேர்ச்சியுண்டு. வித்தியாபிவிருத்தியில் அவனுக்கு எவ்வளவு ஊக்கம் இருந்ததோ, அவ்வளவு ஊக்கம் சிற்பசாஸ்திரிகளை ஆதரிப்பதிலும் இருந்தது. சில மகமதியச் சக்ரவர்த்திகள் போன்று மகமதியரையே ஆதரித்து ஹிந்துக்களைப் பலவகையிலும் கருவறுக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டவன் அல்லன். தனது மகமதிய குடிகளைப்போலவே ஹிந்துக் குடிகளும் க்ஷேமமாயும், இராஜ விசுவாசத்துடன் சந்தோஷமாயும், திருப்தியாயும் இருந்தால்தான் தனக்கும் தன் நாட்டிற்கும் க்ஷேமம் என்று, முன் நடந்த சரித்திர முறைகளால் நன்கு அறிந்துகொண்டவன். ஆகையால் ஒவ்வொரு பாஷையிலும் சிறந்த பண்டிதர் பலர் அவனுடைய தர்பாரில் வெகுமானம் பெற்றுக்கொண்டே இருப்பார். இதுவரையில் சுல்தான் ஆமத் ஒரு வித்வானையாவது அல்லது சிற்பியையாவது அவமதித்தான் என்பதே கிடையாது.

இவ்வகை நற்குணங்கள் பொருந்திய சுல்தான் வெகு பரிவுடன் "ஐயா! சிற்ப நிபுணரே! இப்படி இரும்" என்று பக்கத்தில் ஒரு ஆசனம் காட்டவே, சிற்ப நிபுணன் அதில் அமர்ந்தான். அரசன் "சிற்ப நிபுணரே! நமது வஸந்தமந்திரம் எம்மட்டில் இருக்கின்றது? உம் வாயாலேயே வர்ணிக்கக் கேட்போம்" என்றான்.

சிற்பநிபுணர் எழுந்து "அரசே! உம்மிடம் காட்டிய படத்தின்படி எல்லாவிடங்களையும் என் சாமர்த்தியத்துக்கு எட்டியமட்டில் நன்கு அமைத்திருக்கிறேன். ஆஸ்தான மண்டபத்துக்கு வேண்டிய சலவைக் கற்கள் யவன தேசத்திலிருந்து வந்தவை; என் முன்னிலையில் இருநூறு வேலைக்காரர் அவற்றை வேலை செய்தனர். அவருள் யவன தேசத்தவரே சிலர். அரண்மனைக்கு வேண்டிய மரவகைகள் குமரி நாடென்று சொல்லும் திராவிட நாட்டினின்றும் வந்தன. அந்நாட்டு வேலைக்காரரும் நாற்பது ஐம்பது பேர் நம்மிடம் வேலை செய்துவந்தனர். தாங்கள் குறிப்பிட்டபடியே மேஷம். 25 தேதிக்குள் வேலை முடிந்துவிட்டது. ஆயினும் இன்னும் சிறிது முன்னமேயே முடித்திருக்கலாம்; அதிக சௌகரியமாயும் இருந்திருக்கும்; ஆனால் அவ்வாறு செய்யக்கூடவில்லை. இவ்வருஷம் சீக்கிரமே வெயிற்காலம் ஆரம்பித்துவிட்டது. தாங்கள் எப்பொழுது புறப்பட்டாலும் சரியே. மந்திரம் தயாராய் இருக்கின்றது" என்றான்.

இதைக்கேட்ட அரசன்—"சிற்பநிபுணரிடம் ஒப்புவித்த வேலை சரியாய் முடியாமலும், நேரே நடத்தப்படாமலும் இருந்ததுண்டா? ஆயினும் உம்மிடமிருந்து 10, 15 நாளாய் சமாசாரம் ஒன்றும் வரவில்லை என்று மந்திரி சொல்லிக்கொண்டிருந்தார். மேலும் தாபம் பொறுக்கமுடியாமல் வஸந்தபுரிக்குப் போக வேண்டுமென்ற ஆசைதூண்ட, 2 நாளைக்கு முன்னர் நாமே ஆள் அனுப்பினோம். அவர்கள் உம்மைச் சந்திக்கவில்லைபோலும். நீர் திரும்பிவந்து சமாசாரம் தெரிவித்தது மிகத் திருப்தியாயிற்று" என்று சொல்லிக் கொண்டே தனது பிரதானிகளான மகபத்

அன்னிய மாதர் அவதிக்கு உதவார் : : அன்னதானத்திற்குச் சரி என்ன தானம் இருக்கிறது?

கான், சமாலி என்னும் இருவரையும் பார்த்து "இவர்கள் இஷ்டப்பட்டால் நாளையதினமே கூட வஸந்தபுரிக்குப் புறப்படலாம்" எனவே அவர்கள் இருவரும் ஒருமிக்க "ஆக்ஷேபணையில்லை; உத்தரவுப்படி நடந்துகொள்ள சித்தமாயிருக்கிறோம்" என்றனர். அதனால் அவ்விதமே செய்யச் சுல்தான் உத்தரவிட்டான்.

அதே சமயத்தில் ஆஸ்தான மண்டபத்துக்கெதிரே தெருவில் இரண்டு குதிரை வீரர்கள் படுவேகமாய் ஓடிவந்து வாயில் முன்னர் இறங்கினர். உடனே குதிரைகளை வாசல் காப்போரிடத்தில் ஒப்புவித்துவிட்டு உள்ளே சீக்கிரமாய் நுழைந்து பாக்ஷா முன்னிலையில் மண்டியிட்டு நின்றனர். சுல்தான் அவர்களைக் கையமர்த்தி, இவர்கள் சொல்லப்போகிற சமாசாரத்தைச் சிற்பநிபுணர் மூலமாய் முன்னமே தெரிந்துகொண்டபடியால், "சபாஷ்! வெகு உஷாராய்க் காரியம் முடித்து வந்தீர்கள். நானும் இப்பொழுதே வஸந்தமந்திரத்தைப் பற்றிச் சிற்பநிபுணரிடமிருந்து கேள்வியுற்றேன். பின்னே போய் உமது இடத்தில் உட்கார்ந்து இளைப்பாறுங்கள்" என, பெரியவன் "சில்லரை வேலைகள்கூட எல்லாம்—" என்று சொல்லும்போதே அரசன் "சரி சரி! சந்தோஷமாயிற்று! மல்லீக், நீ போனால் என்ன பாக்கியிருக்கும்? போய் இளைப்பாறு" என்று பேச இடங்கொடுக்காமல் அனுப்பிவிட்டான். இருவரும் முகத்திலிருந்து கீழேசொட்டும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, அப்பால்போய், இரத்தின கம்பளத்தின்மீது உட்கார்ந்துகொண்டு 'உஸ்' என்று பெருமூச்சுவிட்டனர். இவர் இருவருமே ஸிந்துநதி தாண்டி வந்த கவுஸ் சாகிப்பும், மல்லீக் மகமத்கானும்.

இவை முடிந்ததும், சிறிது நேரம் இராஜாங்க விசாரணை நடந்தது. வழக்கப்படி இராஜகாரியங்கள் முறை தவறாமல் நடந்தவுடன் சமாலி "சுல்தான் பகதூர் அவர்களின் உத்தரவுப்படி, சபையோர்காள்! நாளையதினம் ஸர்க்கார் வஸந்தபுரிக்குப் புறப்படும். மறுதினம் தர்பார் கூடுவது வஸந்தமந்திரத்தில்; இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் மறுதினத்திற்குள் வஸந்தபுரி வந்து சேரவேண்டுமென்று உத்தரவு" என்றான். உடனே எல்லோரும் எழுந்துநிற்க, முன்வந்தபடியே தீபவரிசைகளுடன் மெய்க்காப்பாளரும் மந்திரிகளும் தொடர்ந்துவர, அரசன் அந்தப்புரம் திரும்பினான். தலைவாயில் நுழைந்தவுடன் அக்கதவு மூடிக்கொண்டது. உடனே ஸபாமண்டபத்தில் 'ஹம்' என்று சப்தம் கிளம்பிற்று. இரவில் பொழுதாய் விட்டபடியால் வீடுபோய்ச் சேர எல்லோரும் வெளிக்கிளம்பினர்.

## மூன்றாம் அதிகாரம்

## கல்யாண விசாரம்

ஸிந்து தேசத்துக்குக் கிழக்கேயுள்ளது இராஜஸ்தானம். இராஜஸ்தானத்தில் மாளவ தேசம் என்று ஒரு நாடுளது. அந்நாட்டின் அரசர் பிரதாப சிங்கர். அவருடைய பிரதான பட்டணம் உதயபுரி. அரவல்லி மலைச்சாரலின் கீழ்ப்புறம் இருப்பதுபற்றி, மழைமாரி சிறந்திராவிடினும், மலையினின்று இழிந்து வரும் அருவிகளும் ஆங்காங்கே உள்ள ஏரிகளும் குடியானவர்களுக்கு வேண்டுமளவு ஜலம் கொடுத்தன. சில வருஷங்களில், மழையின்றி நீர் நிலைகள் வற்றிப்போய்ப் பயிர் விளையாமல் உதயபுரியிலும் சுற்றுப் பக்கங்களிலும் பஞ்சம் வருவதும் உண்டு. சாதாரணமாய் அவ்விடத்துக் குடியானவர்கள் அமைதியாய்த் தங்கள் நிலங்களை உழுது பயிரிட்டு, நல்ல காலத்தில் ஏராளமாய்த் தானிய வகைகளைக் குவியல்குவியலாய்ச் சேகரித்து வைத்துக்கொள்வார்கள். மகமதியருக்குப் பயந்து பிரதாபசிங்கரின் முன்னோர் பஞ்சால தேசத்தினின்றும் இவ்விடம் ஓடிவந்து சுயேச்சையாய் ஆளவேண்டுமென்று ஏற்படுத்திக்கொண்ட நாடுகளில் இது ஒன்று. இதுபோன்ற பல நாடுகள் அரவல்லி மலைச்சாரலில் தழைத்தோங்கின. மிக வளப்பமுள்ள கங்காதீரம், யமுனாதீரம், ஸிந்துதீரம் இவற்றைவிட்டு அவற்றினும் வளப்பம் குன்றிய இராஜஸ்தானத்துக்கு ஹிந்து தேசத்து அரசர் வந்து குடியேறினது தங்கள் இராஜ்யத்தைத் தாங்கள் சுயேச்சையாய் ஆளவேண்டுமென்ற ஆசையாலேயே தவிர, வேறு ஒரு காரணமும் பற்றியன்று. 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்றபடி இராஜபுத்திரர் தங்கள் தேசங்களைவிட்டு இராஜஸ்தானத்துக்கு வந்துவிட்டபோதிலும், மகமதியர் இவர்களை அமைதியாய் இருக்கவிடவில்லை. ஸிந்து தேசத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள நாடுகளையும், பாஞ்சால

அல்லப்பாலுக்குச் சிக்கியடித்தவள் ஆவின்பாலுக்குச் சர்க்கரை தேடுகிறாள்.

தேசத்தையும், காந்தார தேசத்தையும் கைப்பற்றிக்கொண்ட மகமதிய அரசர் எத்தனையோ பேர் இராஜபுதனத்தின்மீது படையெடுத்துச் சென்று இராஜபுத்திரர்களைத் தோற்கடித்தும் அவர்கள் கையால் தோல்வி யடைந்தும், இடைவிடாது இராஜபுத்திரர்களுக்குத் தொந்தரவு செய்துகொண்டே இருந்தனர். இராஜபுத்திரர்களும் இலேசானவர்கள் அல்லர். சமயம் கிடைத்தபோது 'ஒரு கை பார்க்கலாம்' என்று, இமைகொட்டாமல் காத்திருந்தனர். இவ்வாறு பகை முற்றவே, ஒருவரை ஒருவர் ஜயிப்பதற்குத் தேடும் வழிகளும் பலவாயின. மகமதிய அரசர்கள் சில சமயங்களில் இராஜபுத்திரர்களைத் தோற்கடித்து, அவர்களது நகரங்களைக் கொள்ளையடிப்பதுமன்றி அவர்களுடைய பெண்டிர்களையும் சிறுவர்களையும் பலாத்காரமாய்த் தங்களுக்கு வேலைக்காரர்களாகச் செய்துகொள்வதுமுண்டு; ஸ்திரீகளுள் வயதும், வடிவும், அழகும் பொருந்தியவர்களை மணம் செய்துகொள்வதுமுண்டு. சில நாடுகளில் ஜயமடைந்த மகமதிய இராஜாக்கள் ஜயிக்கப்பட்ட இராஜபுத்திர வீரர்களுடன் சிநேகம் செய்துகொண்டு, இருவருடைய சம்மதத்தின்மேல் ஒரு குடும்பத்தார் மற்றவருடன் சம்பந்தம் செய்துகொள்வதும் சாதாரணமாய் இருந்தது.

இவ்வாறு மாளவதேசத்தைச் சுற்றிலும் பல ஊர்களிலும், நகரங்களிலும், நாடுகளிலும் ஹிந்து மகமதியச் சம்பந்தங்கள் தாராளமாய் நடந்துவந்த போதிலும், அவ்வழக்கங்கள் மாளவதேசம் வரையில் எட்டவில்லை. மலைச்சாரலிலுள்ள அவர்களுடைய பல துர்க்கங்களை எதிர்ப்பது சாத்தியமில்லையென்று எண்ணினர் சில அரசர்கள். ஆகையால் பிரதாபசிங்கர் காலம் வரையில், ஒரு மகமதியனாவது உதயபுரியில் கால் வைத்தவன் அல்லன். தெய்வானுகூலத்தால் இதுவரையில் ஜனங்களும் மகமதியர் கொள்ளைக்கு உட்பட்டதுமில்லை. மேலும் இக்கதைக்காலத்து அரசுபுரிந்த பிரதாபர் மகா தேகவலிமை யுள்ளவர்; அதிபுத்திசாலி; நீதிநெறி தவறாதவர்; தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காப்பவர். ஜனங்களுக்கும் அவரிடத்தில் அதிக பக்தியுண்டு. குடிகள் விருத்தியாகவேண்டுமென்ற எண்ணத்தோடே இடைவிடாது உழைத்ததுபற்றி குடிகள் அவரைத் தந்தையாகப் பாவித்தனர். குடி யுயரவே கோனுடைய செல்வாக்கும் உயர்ந்தது.

பிரதாபசிங்குக்கு, தசரதருக்குச் சுமந்திரன் போன்ற ஒரு மந்திரி இருந்தான். அவன் பெயர் சுமதி. சுமதியுடைய ஆலோசனையின்றிப் பிரதாபசிங்கன் ஒரு இராஜகாரியமும் செய்ய மாட்டான்.

ஐந்திரபுரியிலே தர்பார் நடந்ததினம் ஸாயங்காலம், ஐந்நூறுமைல் தூரம் அப்பாலுள்ள உதயபுரியில் பிரதாபசிங்கன் இராஜாங்கவேலை முடித்துவிட்டு அந்தப்புரம் சென்று, தன்னுயிர்க்காதலியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு உத்தியான வனத்தில் உலாவச்சென்றான். தோட்டத்திலுள்ள மரமடர்ந்த நிழல் நிரம்பிய இடங்களின் வழியே போகும்போது இனிமையாய் வீசும் தென்றல், அப்பொழுதுதான் மலர்ந்த மல்லிகை முல்லை இவற்றின் வாசனையைத் தேக்கிவர, அந்த நறுமணத்தை நுகர்ந்து, ஆனந்தத்துடன் பக்ஷிகள் பாடும் கானத்தையும், கீழே ஓடும் சிற்றருவிகள் செய்யும் மெல்லிய ஒலியையும், மரங்களின் ஊடேசெல்லும் இளம் காற்றின் அமர்ந்த ஓசையையும் கேட்டு, மனவமைதியுடன் அத்தோட்டத்து நடுவே செய்துள்ள லதாக்கிரகத்தில் சந்திரகாந்தக் கல்லால் இழைத்த ஆஸனத்தில் இருவரும் உட்கார்ந்தார்கள். வடிவழகுக்கேற்ற பெயர்பெற்ற காந்திமதி என்னும் பட்டமஹிஷி தான் வழிநெடுகக் கொய்துவந்த நறுமணம் நிரம்பிய தேன்வழியும் புஷ்பங்களைத்தொடுத்து, அத்தொடையலை இரண்டு பாகமாக்கி ஒன்றைத் தன் பிராணநாதன் முடிமீதும் இன்னொரு பாகத்தைத் தன் தலையிலும் அணிந்துகொண்டாள். அவ்வாறு சூட்டிய தன் மனைவியின் வலது கரத்தைப்பற்றித் தன் இருகரங்களிலும் பிடித்துக்கொண்டு புன்சிரிப்புடன் அவள் முகத்தை உற்று நோக்கினான். இதுவரையில் இருவரும் ஒருவார்த்தைகூடப் பேசவில்லை. உற்று நோக்கிய முகத்தை ஏறிட்டுப் பார்த்து, ஸூக்ஷ்ம புத்தியுள்ள காந்திமதி "நாதா! நீவிர் இன்று இராஜகாரியத்தில் அதிக சிரமம் எடுத்துக்கொண்டீர் போலும்! ஆழ்ந்த யோசனையுடன் இருக்கின்றீர். வழிவிளங்காக் கடினமான இராஜ இரகசியங்கள் ஏதாவது மனதை வருத்துகின்றனவோ? என்னுடன்

அன்னம் முட்டானால் எல்லாம் முட்டு :: அன்னநடை நடக்கப்போய்த் தன் நடையும் கெட்டாற்போல

இதுவரையில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே. மனத்தளர்வைக்காட்டும் இம்முகவாட்டத்திற்குக் காரணம் யாது? என்னிடம் தெரிவிப்பதில் பயனுண்டென்று எண்ணினால், நானும் அறிந்துகொண்டு தங்கள் கவலையைப் பாகம் செய்து கொள்ளுகிறேன். எப்படி இருப்பினும் உம்முடைய முகவாட்டம் என் மனத்தைக் கலக்குகின்றது" என, அரசன் இன்னமும் புன்சிரிப்புடன், சற்றே பெருமூச்சுவிட்டு "காதலியே! இம்மனத்தளர்ச்சி முற்றிலும், இராஜ்யபாரத்தால் வந்ததன்று. நம்மிளங்குமரியின் வயதை எண்ணுங்காலத்திலெல்லாம் என்மனம் இவ்வாறே தளர்கின்றது. அவளுக்கோ வயது 16-க்கு மேல் ஆய்விட்டது. 16 வருஷத்துக்குமுன் நாம் இருவரும் மகப்பேறு இல்லாக் குறையால் அரவல்லிமலைமேலுள்ள, சயம்புவாய் விளங்கும் எம்பெருமான் ஜோதிவடிவான சிவபிரானைச் சேவித்ததும், அவன் கருணைபெறும்பொருட்டுக் கடுநோன்புமேற்கொண்டு அவன் பாதாரவிந்தத்தில் அடைக்கலம் புகுந்ததும், அவ்விடத்தில் எம்பெருமான் திருவருளால் சித்த புருஷர் நம் முன் தோன்றியதும், அவர் அநுக்கிரகத்தால் நமக்கு இக்குமரி அவதரித்ததும், எனக்கு நேற்று நடந்ததுபோல் தோன்றுகின்றன. நமது மகளோ, இப்பதினாறு ஆண்டினுள் அறிவும், வனப்பும், மனவலியும் வாய்ந்து, இராஜபுதனத்தையே விளக்கவந்த லக்ஷ்மி போல் விளங்குகின்றாள். இவ்விஷயத்தை நாம் இருவரும் நன்கு அறிகின்றோம். அவளுக்குத் தக்க கணவனை நாம் எவ்வாறு தேடப் போகிறோம். பெண்மணியே! இதுதான் என் மனத்தை வருத்துகின்றது. இது விஷயமாகவே 10, 15 நாளாய் நானும் சுமதியும் இடைவிடாது ஆலோசனை செய்கிறோம்" என்றான்.

இதைக்கேட்டதும், அரசியின் முகமும் வாடியது; கண்கள் சலித்தன; அரசிக்கும் இவ்வெண்ணம் அடிக்கடி துக்கத்தை உண்டு பண்ணிற்று; ஆனால் இவ்விஷயத்தில் அரசன் மனம் இவ்விதம் பதைக்கும் என்று எண்ணவில்லை. கல்யாண விஷயத்தைப்பற்றி இராணி பேசின ஸமயங்களில் எல்லாம் பிரதாப சிங்கர், 'இராஜஸ்தானத்தில் இராஜபுத்திரர்களுக்குக் குறைவா; இதற்குக் கவலைப்படுவதா; போ! போ! இதற்கென்ன கவலை?' என்று தன் மனைவி சொல்வதைத் தட்டிப்பேசுவார். அவளும் புருஷனுடைய தைர்யத்தை ஒட்டித் தானும் தைர்யமடைவாள். இணையில்லாத் தன் புருஷன் எப்படியாவது தன் அருமைப் புதல்விக்குத் தக்க வரன் நிச்சயம் செய்வார் என்பது அவளுக்குத் தீர்மானமாய்த் தெரிந்தது. உண்மையாகவே மாப்பிள்ளை தேடுவது சிரமமான காரியம் என்று பிரதாபசிங்கருக்குச் சில நாளைக்கு முன்வரையில் தோன்றவில்லை. மந்திரியுடன் உட்கார்ந்து யோசிக்கும்போது, குலம், கோத்திரம், மரியாதை, உலகவாழ்வு முதலான எத்தனையோ விஷயங்களில் பல பிள்ளைகள் கீழ்ப்பட்டு இருந்தனர். தக்க வம்சத்தில், ஒருவர் இருவரே கிடைத்தனர். அரசன் விழித்துக்கொண்டான். அப்பொழுது முதல், கல்யாண விசாரமே பெரு விசாரமாயிற்று. அரசனுடைய விசாரத்தைக் கண்ட அரசிக்கோ ஒன்றும் தோன்றவில்லை.

இருவரும் சிறிது நேரம்வரையில் மௌனமாய் இருக்க, அரசன் "காந்திமதி! என் மனதை வருத்துவது இன்னொரு கவலை. நமது இராஜஸ்தானத்துக்கும் ஆரிய அரசர்களுக்கும், நமது நாகரீகத்துக்கும் தீராப்பகை கொண்டு நம்மவரைக் கருவறுக்கும் மகமதியப் பாக்ஷாக்கள் நம் குமரியைக் கைப்பற்றும்பொருட்டு, கொடும்பாவிகளான, நாகரீகமற்ற, வானரசேனைகள் போன்ற, ஹூணர்கள் முதலியோரைக் கூலிப்படைகளாகக் கொண்டு, நம் மேற்சென்று நம் நாட்டிற்குத் தீங்குவிளைவிப்பார்களோ என்றும் எண்ணுகிறேன். அதை எண்ணுங்கால் என் மனம் பதைக்கின்றது. நமது குமரி காரணமாகக் குடிகள் நாசமடைவார்கள். ஆகையால் தோள் வலியும், துணை வலியும், அறிவும், சூழ்ச்சியும், பெருந்தன்மையும், தர்மமும் நிறைந்த இளவரசனைத் தேடிப் பிடித்து அவனுக்கு நமது குமரியைத் தானம் செய்து விட்டேனேயானால் தேசத்துக்கும் க்ஷேமம் தேடினவனாவேன்; தகப்பன் குமாரிக்குச் செய்யவேண்டிய கடமையும் முடித்தவனாவேன். அப்புறம் என் முன்னோர் போன்று உன்னுடன் ஹிமயமலைச்சாரலில் சென்று எம்பெருமான் மீது மனதைச் செலுத்திக் கவலையற் றிருப்பேன். சீக்கிரத்தில் என் எண்ணம் முடிவுபெறு மென்ற நம்பிக்கையும் தோன்றுகின்றது. நம்பிக்கை

பலப்படும்போதல்லவா மனதுக்கு பயமும் அதிகரிக்கின்றது? இதல்லவா உலக வியற்கை! தீவில் விடப்பட்டவனுக்குத் தனியாய் இருக்கும்வரையில் தனியாய் இருக்கிறோமே என்ற ஒரே பயம்; தூரத்தில் கப்பலைக் கண்டானாகில் அதில் இருப்பவருக்கு ஜாடை காட்டுகிறான். அவர்கள் இவனைக் காப்பாற்றவரும்போது மனத்தில் நம்பிக்கை ஏற்படுகின்றது; அந்த நம்பிக்கையுடன் கப்பல் பாறையில் பட்டு உடைந்துவிடுமோ என்ற கவலை எவ்வளவு பலமாய் இருக்கும் என்பதை நீயே யோசித்துப்பார்! அங்ஙனம் இருக்கின்றது என் மனது!" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தான்.

அரசி "என் அன்பே! நீர் ஆலோசிப்பது மிகவும் சரியென்று சொல்வதைத்தவிர நான் இன்னும் என்ன சொல்லக்கூடும்! எனக்கு ஒன்றும் தோற்றவில்லையே! மேலும் நான் என் அருமைத் தகப்பன் வீட்டில் இருக்குநாளில் அத்தேசத்தைக், கோரி வம்சத்தார் படையெடுத்ததும், பெண்டிர்களை அவர்கள் வருத்தியதும், அதற்காக என் தகப்பனார் எங்களை உதயபுரிக்கு அனுப்பியதும், தமது உதவியால் என் தகப்பன் அவர்களை ஒருவாறு வென்றதும், எனக்கு ஞாபகம் வருகின்றது. ஹா! ஹா! அவர்கள் கொடுமையை என்னவென்று சொல்வது!——" என்று துக்கப்பட்டாள்.

அரசன் "இதையெல்லாம் திரும்பத் திரும்ப ஆலோசனை செய்து கடைசியாய் நமது—" என்று வாயெடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, "ஜயவிஜயீபவ! ஆஸ்தான மண்டப வாயிலில் சுமதி வந்து நிற்கின்றார். உடனே சமுகத்தைத் தரிசிக்க வேண்டுமாம். உத்தரவு கேட்கின்றார்" என்று ஒரு சேடி எட்டி நின்று தாழ்ந்த குரலுடன் சொல்லவே, அரசி "சுமதி வருவதில் என்ன தடை; அரசே! அவரை வரச்சொல்வோமே?" என அரசன் "சத்தியவல்லி! சுமதிக்காகவே நாங்கள் இங்கு காத்திருப்பதாகச் சொல்லி உடனே உள்ளே வரச்சொல்" என்றான். சத்தியவல்லி, மின்னல் தோன்றி மேகத்துள் மறைவதுபோல் மரங்களுக்கு நடுவே மறைந்தாள்.

அரசன் "என் உயிர்க்காதலியே! பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் ஆயிற்று இப்பொழுது சுமதி வருவது. நாம் செய்யும் ஆலோசனை சுமதிக்குத் தெரிவது மிகவும் நல்லதேயல்லவா? சுமதி எங்கிருந்து வருகிறார் தெரியுமா உனக்கு? என் அருமை மனைவியே நீ அறியாய்! அவரை இதே விஷயமாய் ஜோதிபுரிக்கு அனுப்பியிருந்தேன். ஆரிய அரசர்களுக்குள் நமது ஜயபாலனைவிட ஒருவரும் நமது லலிதாம்பிகைக்குத் தக்க கணவன் என்று எனக்குத் தோற்றவில்லை. அதைப்பற்றி ஜயபாலனுடைய அபிப்பிராயத்தை அறிந்துவரும்பொருட்டுத்தான் சுமதியை ஜோதிபுரத்துக்கு அனுப்பினேன். மேலும் ஜயபாலன் நமக்கு நெருங்கிய பந்துவல்லவா? அவன் தகப்பன் எனது அம்மான் குமாரன்; மகமதியர்களுடன் சம்மந்தம் செய்துகொண்டவனு மல்லன்; வயது 25 ஆயிற்று; அதிபுத்திசாலி யென்று சொல்லுகிறார்கள். தைரியமோ சொல்லி முடியாது. 18-வது வயதிலேயே மகமதிய ஆப்கன் தேசத்தார் ஜோதிபுரியை எதிர்த்தபோது ஆட்டு மந்தையில் புலி பாய்ந்ததுபோல் அவருடன் போராடிச் சின்னாபின்னப் படுத்தினானாம். அவனையே நமது செல்வக் குழந்தைக்குக் கணவனாக்க வேண்டும் என்பது எனது கோரிக்கை. ஈசன் திருவுள்ளம் எப்படியோ! நல்லவேளையாய்ச் சுமதியும் திரும்பிவந்து விட்டாரே. அவர் சொல்வதைக் கேட்டால் எல்லாம் விளங்குகின்றது" அதற்குள் சுமதியும் வர—"வாரும் மந்திரி! இப்படி உட்காரும்" என சுமதி, அரசன் அரசி இருவருக்கும் தக்கபடி வந்தனம் செய்து உபசாரம் சொல்லி அவருக்கு எதிரில் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தான்.

அரசன்.—"ஜோதிபுரியிலிருந்து இப்பொழுதுதான் வந்தீர்போலும்! அவ்விடத்தில் எல்லோரும் சுகமா? நீர் போன காரியத்தைப் பற்றி இப்பொழுதுதான் நமது அரசியிடம் சொல்லிக் . கொண்டிருந்தேன். அவ்விஷயத்தைக்குறித்து நீர் என்ன சொல்லப் போகிறீரோ அதைக் கேட்க மிகவும் ஆவல்கொண்டிருக்கின்றோம்."

மந்திரி.—"மேன்மை பொருந்திய எனது அரசியர் அபிப்பிராயம் என்ன அவ்விஷயத்தைப்பற்றி?"

அரசி.—"எனது அபிப்பிராயமா? அது என்ன அப்படிக் கேட்கிறீர்கள்! நீங்கள் இருவரும் தீர்க்காலோசனை செய்து, மேற்

அன்ன மயம் இன்றுப் பின்னை மயம் இல்லை : : அன்று எழுதினவன் அழித்து எழுதுவானோ?

கொண்ட காரியம் எனக்கும் சம்மதமே; அதைப்பற்றித் தடையும் உண்டோ! என்னைக் கேட்பானேன் ?"

சுமதி.—"அப்படியானால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. போனவாரம் திங்கட்கிழமையன்று இவ்விடம் விட்டுப் புறப்பட்டதும், ஆரவல்லி மலையைத் தாண்டிச் செல்ல இரண்டுநாள் ஆய்விட்டது. பிறகு இரண்டு நாள் வழி நடந்து வெள்ளிக்கிழமை தினம் ஜெயபாலர் அரண்மனை சேர்ந்து விசாரிக்கவே, அவர் அன்று காலைதான் வேட்டையாடச் சென்றதாகவும், விலங்குகளால் குடிகளுக்குண்டான இடர்களைத் தீர்த்துவிட்டு வேட்டை முடித்துவர இரண்டு நாள் செல்லுமென்றும் அரண்மனை அதிகாரியின் மூலமாய் அறிந்து கொண்டோம். அரண்மனையிலேயே நாங்கள் விருந்தினராக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் அங்கேயே ஒரு விடுதியில் இரண்டுநாள் தங்கினோம். ஞாயிற்றுக்கிழமை காலையில் அரசர் வேட்டம் செய்து களைத்து வந்தனர். எனது வரவு கேட்டதும் களைப்பையும் கவனியாது என்னை வரவழைத்துச் சற்றுநேரம் அளவளாவி, நான் வந்த பொழுது தாம் ஊரில் இல்லாமல் இருந்ததற்காகவும், இரண்டுநாள் அலுவலுள்ள மந்திரியாரைத் தாமதம் செய்து விட்டதற்காகவும் வருத்தப்பட்டார். நான் என்னால் கூடிய மட்டில் அவருர்கு உபசாரம் சொல்லிய பின், எல்லோருடைய க்ஷேமத்தையும்விசாரித்துத் தாம் மறுபடி என்னை அழைத்துப் பேசுவதாகச் சொல்லிவிட்டு இளைப்பாறப் பூஞ்சோலையில் சென்றுவிட்டார்."

அரசி.—"ஹா! ஹா! என்ன பெருமை! என்ன மரியாதை! மஹா கம்பீரகுணமுடையவர்போலும் அவ்வரசு!"

சுமதி.—"தாயே! இம்மட்டுமோ! நம்மைக் கௌரவப்படுத்தவேண்டுமென நாம் இறங்கியிருந்த இடத்தில் நமது புலிக்கொடியைப் பறக்கவிடும்படியும், கோட்டைவாயிலிலும், ஆஸ்தான மண்டபத்திலும், தோரணவீதியிலும், தமது யாளிக்கொடியுடன் நமது புலிக்கொடியைப் பறக்கவிடுக என்றுப் பறைபறைவித்தனர். அன்றிரவே போஜனமுடித்து, தனது பள்ளியறைக்கு என்னை வரும்படி சொல்லியனுப்பினர். நான் போனதும் பின்னொரு முறை உபசார வார்த்தைகள் சொல்லி "வந்த விஷயம் சொல்லுக" வென்றார். அப்பொழுது யான் தாம் சொன்னவற்றையும், அவ்வாறு சம்பந்தம் ஏற்படுவதால் உண்டாகும் க்ஷேமத்தையும், சம்பந்தம் ஏற்படவேண்டிய அவசியத்தையும் எடுத்துக்காட்டினேன். அதற்கு ஜயபாலர் சிறிது நேரம் மௌனமாய் இருந்து ஆலோசனை செய்துவிட்டு, 'ஐயா! என் தகப்பனாரும் உம்மரசும் நெருங்கிய பந்துக்கள்; மேலும் ஆப்த சிநேகிதர்கள்; என் தகப்பனார் இறக்கும் வரையில், தனக்குப் பிரதாபசிங்கரைவிட உற்ற நண்பர் இல்லை என்றே சொல்லிக் கொண்டிருந்தார். ஆகையால் அவர் எனக்குப் பிதா போன்றவர். அவர் உத்தரவுப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆயினும் என் தகப்பன் இறந்தது முதல், பிதாவுக்குப்பிதாவாய் என்னையும், அரசுக்குஅரசாய் என் பிரஜைகளையும் காப்பாற்றிவரும் என் உத்தம மந்திரியாராகிய சிதானந்தரை முதலில் ஆலோசனை கேட்கவேண்டும். அவர் ஸம்மதமின்றி ஒன்றும் செய்ய இயலாது; அவரையும், அவர் மூலமாய் என் குடிகளின் மனப்போக்கையும் விசாரித்து ஒரு வாரத்துக்குள் உம்மரசருக்கு சமாசாரம் அனுப்புவேன். தவிர என் அன்னை அகிலாண்டநாயகியார் இருக்கிறார். அவருடைய மனம் கோணாமலும் நான் நடந்துகொள்ளவேண்டும். இவ்விஷயங்களை நீவிர் நும் வீராதிவீரரான அரசருக்கு இயம்பலாம். முன்னமேயே அனாவசியமாய் இரண்டு நாள் நிறுத்திவிட்டேன். இனி நீர் தாமதிக்காமல் புறப்பட்டு உதயபுரி போகலாம். எல்லோரையும் கேட்டுத் தக்க பதில் சீக்கிரமே அனுப்புகிறோம்' என்று சொன்னார்."

சுமதி சொல்லி முடித்தவுடன் அரசனுக்கும் அரசிக்கும் அதிக சந்தோஷமாயிற்று. புன்சிரிப்போடு அரசன் அரசியின்முகத்தைப்பார்த்தான். இராணியும் மனத்துக்குள் "இவ்வரன் நமது மகளுக்கு நிச்சயம் ஆய்விட்டால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்!" என்று தன் மனதிலேயே ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில், சாயங்கால வேளையானபடியாலே மரத்தின்மேல் உட்கார்ந்து கத்திக்கொண்டிருந்த காக்கைகளில் இரண்டு சண்டைபிடித்துக்கொண்டு மூவருக்கும் நடுவில்

அன்னம் மிகக் கொள்வாளும் ஆடை அழுக்கு ஆவாளும் பதர்.

'பொத்' தென்று விழுந்து பலமாய்க் கத்திக் கொண்டே இரண்டு கொடியில் பறந்தோடின. மூவருக்கும் முகங்கள் வெளுத்தன. உடல் வியர்த்தது; கைகால்கள் பதறின, இராணி 'ஓ' வென்று கத்திக்கொண்டு அவ்விடம் விட்டோடத் தலைப்பட்டாள். அரசர் "ஹா, ஹா, பயப்படாதே! பயப்படாதே!" என்று அவளைப் பின்தொடர்ந்தார். மந்திரி என்ன செய்வான்? பாவம்! மேலும் கீழும் பார்க்கின்றான். சற்றுத் தூரத்தில் அரசனும் அரசியும் நிற்கவே, மந்திரி மெதுவாய் அங்கே சென்றான். ஒருவர் மனக்கலக்கத்தை மற்றவர்களுக்குக் காட்டக்கூடாதென்று அம்மூவருள் ஒவ்வொருவரும் பிரயாசைப் படுகிறார்கள். முதலில் அரசன் மனத்தைத் தேற்றிக் கொண்டு "என் அன்பே! ஏதோ இரண்டு காக்கைகள் சண்டை பிடித்துக்கொண்டு கீழ் விழுந்தால் நீ அதற்குப் பயப்படலாமா? ஏன் அப்படி ஓடிவந்தாய்? தினம் தினம் இப்படித் தான் ஸாயங்காலத்திலும் காலையிலும் பக்ஷிகள் சண்டை போடுகின்றன. நாம் அவற்றைக் கவனிக்கக் கூடுமா?" என்று அரசிக்கும், சுமதியை நோக்கி "சுமதியாரே அதிகப் பிரயாசைப்பட்டு வழிநடந்துவந்திருக்கின்றீர். நாளை மறுபடி பார்ப்போம். எப்படியும் ஜயபாலர் அனுப்பும் சமாசாரத்தை எதிர்பார்ப்போம். நாம் போய் வரலாமா?" என, சுமதி "சித்தம், அப்படியே செய்யலாம்" என்று புறப்பட்டான். அரசனும் இராணியும் அந்தப் புரம் நோக்கிப் புறப்பட்டனர். (தொடரும்.)

---

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

### நன்னெறி

நின்றவூர்ப் பக்கத்தில் அது ஒரு சிறு கிராமம். செல்வகுடி என்ற பெயர் வழங்கிவந்தது. பெரும்பான்மையும், இக்கிராமத்திலுள்ள நஞ்சை நிலங்களைப் பயிரிடுங் குடியானவர்களேதான் வஸித்து வந்தார்கள். அநேகமாக அவ்வூரிலிருந்த ஜனங்களெல்லாம், ஒரே ஜாதியாராயும், கட்டுப்பாடுள்ளவர்களாயும் விவேகமோ, அவிவேகமோ, தங்களுடைய ஸமுதாயப் பழக்க வழக்கங்களைக் கைவிடாதவர்களாயுமிருந்தார்கள். அவைகளில் சில, மிகவும் ஆழ்ந்த கருத்தோடு விதிக்கப்பட்டவைகளாயிருந்தன. சில, ஏற்பட்ட காலத்தில் பயன் தரக் கூடியவையாயிருந்தாலும், தத்காலத்தில் பிரயோஜன மதிகமில்லாதவை யாய்விட்டன. இன்னும் சில, நாகரீகமடைந்து விளங்கும் நம் நேயர்களுக்கு வியப்பையும் நகைப்பையும் தரும்.

இத்தகைய பழக்கங்களை இங்கு விவரிப்பது நம் நோக்கமல்ல. அதில் ஜாஸ்தி ஆவலுள்ளவர்கள் நேரில் சென்று கண்குளிரப் பார்த்தானந்தித்து வரலாம். இங்கிருந்து ஒருநாள் ப்ரயாணந்தானே. அது ஒரு ப்ரமாதமா? ஆனாலும் நம் கதைக்கு அவசியமாயுள்ள ஓரேயொரு விசித்ரமானஏற்பாட்டைமட்டும்சொல்வோம். இந்தக் 'கரும்பர்' என்ற ஜாதியாருள் குழந்தை பிறந்தால், அதற்குப் புண்யாவாசனம் பண்ணும்போது யாராவது ஒருவர், அக்குழந்தையின் தந்தை தாய் கைவிட்டு விட்டாலும், குழந்தையைத் தான் காப்பாற்றுவதாக வாக்ப்ரதானஞ் செய்யவேண்டும். அதன் பின்பே மற்றச் சடங்குகள் நடக்கும். எக்காரணத்தாலாவது அப்படி வாக்களிக்க ஒருவரும் முன்வரவில்லையென்றால், அக்குழந்தை ஜாதியில் சேர்த்துக் கொள்ளப்படாது. அதைச் "சனியன்" என்று எல்லோரும் விலக்கி விடுவார்கள். ஆனால் விசேஷமாக அப்படி நேருவது கிடையாது. மாமனோ பாட்டனோ, யாராவது ஒருவர் கைகொடுக்க மாட்டார்களா?

நிற்க, கிராமத்தின் தென்னண்டை வீதியில் இருக்கும் ஒரு வீட்டில், வாசலில் சித்ரமாக மாக்கோலங்கள் போட்டும், மாவிலை, தென்னங்குருத்து முதலியவைகளால் தோரணங்கள் கட்டியும், ஏதோவொரு சுபகாரியத்தின் அறிகுறிகள் விளங்குகின்றன. என்னவாயிருக்கலாம்? உள்ளே போகலாம். கூடத்தில் பாய்விரித்து ஒரு ஸ்த்ரீயும் புருஷனுமே உட்கார்ந்து, கவலை காட்டும் முகத்துடன் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். புருஷனுக்கு ஸுமார் 45 வயதிருக்கலாம்.

---

அன்றைக்குத் தின்கிற பலாக்காயைவிட இன்றைக்குத் தின்கிற களாக்காய் பெரிது.

சரீரக்கட்டுள்ளவனாகவும், நல்லெண்ணங்களை மனதி லுள்ளவனாகவும் காணப்படுகிறான். ஸ்த்ரீக்கும் ஸுமார் 35 வயதிருக்கும். அவர்களிருவரையும், அவ்வீட்டிலுள்ள ஸாமான் வகைகளையும் கவனிப்போமானால் நிரம்பவும் எளியவர்கள் என்பது விளங்குகிறது. என்றாலும், அன்று நடக்கவேண்டிய வைபவத்தை யுத்தேசித்து, விலையுயர்ந்த தல்லாததாயினும், புதிதான வஸ்திரங்களை அணிந்திருக்கின்றனர்.

“நான் அதற்குத்தான் அப்பொழுதே சொன்னேன். எது எப்படியிருக்குமோ? வருவது என்னவராதது என்னஎன்று யாரறிவார்கள். நமக்குவேண்டியவர்கள் 4 பேர் இல்லாத இடத்துக்குப் போகவேண்டாமென்று. ஏதோ, இங்கேவந்தால் கோட்டையைப் பிடித்துவிடலாமென்று வந்தீர்கள். ‘ஏழை சொல் அம்பலமேறுமா?’ இப்பொழுது இத்தனை வருஷங் கழித்து, நமக்கு மந்தபாக்யமுண்டாகுமா என்றேங்கி யிருந்து, ஒரு புருஷக்குழந்தை பிறந்துங்கூட, அதற்குப்புண்யவாசனத்தன்று கண்ணீர் விடும்படியான ஸ்திதியி லிருக்கிறோம். கடவுளுக்கு இதுவும் ஒரு விளையாட்டாக்கும்” என்று ஒரே மூச்சாய்ச் சொல்லி முடித்தாள்.

“வாஸ்தவந்தான். நீ சொல்லவில்லையென்று யார் சொன்னார்கள்? இருந்தாலுந்தான் என்ன? இப்படி நிஷ்கண்டகர்களாக விருப்பார்கள் என்று எப்படி யெதிர் பார்ப்பது? என்ன ப்ரமாதம், வாய்ச்சொல்லில் முத்தா உதிரப்போகிறது? ஏதோ சாஸ்திரத்துக்காகப் ‘பெற்றோர் கைவிட்டாலும் நான் காப்பாற்றுவேன்’ என்று சொன்னாலென்ன? ஓட்டியா கொள்ளும்? இல்லை நாம்தான் ப்ரமாண நஷ்ட வ்யாஜ்யம் தொடுக்கப்போகிறோமோ—”

“ஆமா, ஊரிலுள்ளவாளுக் கென்னவந்தது? ஏழை எளியவர்கள் என்றால், எல்லாருக்குமே ஏளனந்தான். ‘பத்தும் பெத்துப் பவிஷாக வாழ்ந்தால், நான், நீ என்று வந்து விழுவார்கள். நம்மால் யாருக்கென்ன ஆகணும். அதிருக்கட்டும், நீங்களும் யாரெல்லாமோ கேட்டீர்களே, என்னதான் சொன்னார்கள்?”

“ம்—சொன்னார்கள். ராமன் வீட்டிற்குப் போய்ப் பேசினேன். அவன் சொன்னான் ‘அப்பா, வாக்களிப்பதென்றால் அக்கார்யம் நம்மால் முடிந்ததா என்று சீர்தூக்கிப் பிறகு செய்ய வேண்டும். யோசனையில்லாமல், வாக்குக் கொடுத்துவிட்டு, பின்பு விழிப்பதில் என்னபலன்? என்னமோ பாட்டுக்கூட உண்டே. என்ன—

நசையழுங்க நின்றோடி பொய்த்தனிரை தொடீஇ
செய்நன்றி கொன்றாரில் குற்றமுடைத்து—,

என்று. என்னமோ இவன்தான் ஹரிச்சந்திரன்மாதிரி பேசினான்”

“அப்புறம் யாரைக் கேட்டீர்கள்?”

“கோடிவீட்டுத் தடிரங்கனைக்கேட்டேன். ‘நம்மால் முடியாதப்பா அந்த வேலை யெல்லாம். வீண்தண்டார் விலகப்பட்டு விழிப்பானேன்? நம் வேலையை நாம் பார்ப்பதற்குக்கூட ஸாவகாசமில்லை. பகல் 60 நாழிகை யிருந்தால் தேவலையென்று தோன்றுகிறது. அந்த லக்ஷணத்தில் பிறர் கார்யத்தைத் தோளிற்போடுவானேன்’ என்று ஏதோ நம்முடைய குடும்ப பார முழுமையும் இவன் தாங்கவேண்டியவன் போல் பேசினான். அருவருப்பாயிருந்தது. வந்துவிட்டேன்.”

“அப்புறம்?”

“ஸரி, இந்தப் பேச்சில் என்ன லாபம்? விட்டுத்தள்ளு. மனதுக்கு நிரம்ப சல்லியமாயிருக்கிறது. ஒவ்வொருவனும் ஏதோ புராணம் படிக்கிறானே பொழிய, ஒருவனுக்காவது, மனிதர்கள் ஒருவர்க்கொருவர் உதவுவதே ஜீவதர்மம். அதிலும் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்களுக்குப்பரஸ்பர உதவி அத்யாவச்யகமென்று தெரியவில்லை. படித்தென்ன, பதவியிருந்தென்ன? மனதில் ஈவு இரக்கமல்லவா மனிதனுக்கழகு?”

“பின் மேலே கார்யம் எப்படி நடக்கிறது? இப்படியே விட்டுவிடுங் கார்யமா? ஆயிரங் காலத்துப் பயிரல்லவா நம்மருமைக்குழந்தை? எதற்கும் நம்மாலானதைச் செய்ய வேண்டாமோ? மணி எட்டு இருக்கும்போ லிருக்கு. மெள்ள நின்றவூருக்குத்தான் போய்ப்பார்த்து வாருங்களேன்.”

“அதில் என்ன உபயோகம். நாம் இங்குவந்து ஒருவருஷமாகிறது. அப்படியிருந்தும் இங்கேயே, நமக்குதவ ஒருவரும் முன்வரவில்லையென்றால், நமக்கு ஜாஸ்தி யறிமுகமே யில்லாத வூரில், நம்மை யார் கவனிக்கப் போகிறார்கள்? ஆனால், அந்தக் குறைதான் எதற்கு?

அன்றைக்குக் கிடைக்கிற ஆயிரம் பொன்னிலும் இன்றைக்குக் கிடைத்த அரைக்காசு பெரிது.

அங்கும்போய்ப் பார்த்துவிட்டால், பச்சாத்தாபத்திற்கு இடமில்லை. முடிவு பகவான் கையிலல்லவா இருக்கிறது?" என்று சொல்லிவிட்டு நின்றவூரை நோக்கி நடந்தான்.

வெயில் மந்தமாக அடித்துக்கொண்டு தேகத்திற்கு ஹிதமாக விருந்தது. நந்தவனத்தின் வழியாகப் போகும்போது பரிமளத்தோடு கூடிய குளிர்ந்த காற்றுவீசி, மனிதனின் கல்நெஞ்சத்தாலுண்டான மனப்புண்ணை மாற்றிற்று. இலைகள் அசைவதாலுண்டான 'சலசல'வென்ற ஓசையும், அங்குமிங்குமோடியாடி இரைபொருக்கி விளையாடும் பக்ஷிகளின் ரமணீயமான த்வனியும், அவனுக்குத் தெரியாமலே ஒருவித உத்ஸாகத்தை எழுப்பின. ஆகா! பகவத் ச்ருஷ்டியில் குறைந்த அறிவுள்ள பிராணிகளே உத்ஸாகப்படவும், ஸந்தோஷத்தையுண்டாக்கவும் சக்தியுற்றிருக்கின்றன. பகுத்தறிவையும் படைத்த மனிதன் மட்டுந்தான் கவலையையும், கஷ்டத்தையும் விளைக்கிறான்" என்று எண்ணமிட்டுக்கொண்டே நிமிர்ந்தான். கருடன் ஒன்று உல்லாஸமாகப் பறந்துகொண்டிருந்தது. கருடன் விஷ்ணுவின் வாகனமாகையால் பூஜ்யதையானது என்ற கொள்கையுடையோனாதலால், "ஹரி! ஹரி! க்ருஷ்ண, க்ருஷ்ண!" என்று பக்தியோடு அஞ்சலிபண்ணிவிட்டு, "ஸரி, நல்ல சகுனந்தானாகிறது. போகுங் கார்யம் பலியாது போகாது" என்று தைர்யமுண்டாக, மனோத்ஸாகத்தோடு நடக்கலானான்.

நாலடி நடப்பதற்குள் எதிரில் ஒருவன் எதிர்ப்பட்டான். எதிர்ப்பட்டவன் இவனைக் கண்டதும் நின்று "ஏனப்பா? எங்கே காலை நேரத்தில் இவ்வளவு வேகமாகச் செல்லுகின்றாய்?" என்றான்.

"ஐயா! நமஸ்காரம். நிரம்ப நாட்கள் குழந்தையில்லாமலிருந்து இப்பொழுதுதான் கடவுள் க்ருபையால் ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. அதற்கு இன்று புண்யாவாசனம். எங்களுக்குள் ஒரு வழக்கம், இன்று யாராவது, அக்குழந்தையை ரக்ஷிப்பதாக வாக்களித்தாலொழிய, குழந்தை ஜாதிப்ரஷ்டமாகும் என்று. கிராமத்திலுள்ளவர்கள் 'நான் மாட்டேன், நான் மாட்டேன்' என்று சொல்லிவிட்டதால், கடைசி ஆசைக்கு நின்றவூர் போய், யாரையாவது கேட்கலாமென்று போகிறேன்."

"இதென்ன? நிரம்ப விந்தையான பழக்கமாகவல்லவோ இருக்கிறது? ஆமா, அப்படி ரக்ஷகர் வருவது யாராகவிருக்கவேண்டுமென்ற நியதி யேதாவதுண்டோ?"

"அதெல்லாமொன்றுமே கிடையாது. யாராயிருந்தாலும் ஸரியே."

"அப்படியானால், கவலையை யொழியுங்கள். என்னோடு வீடு திரும்புங்கள். நான் கங்கணங் கட்டிக்கொள்கிறேன் உங்கள் குழந்தையை ரக்ஷிக்க."

"ஐயா, அநேக கோடி நமஸ்காரம் உமக்கு. நீர் எனக்குச் செய்வதுதான் ஆபத்ஸகாயம். நீர் மகராஜனா யிருக்கவேண்டும்" என்று மனதார வாழ்த்திவிட்டு, திரும்பி வீடுவந்து சேர்ந்தான் புது மனிதனோடு.

கிரமப்படி, புண்யாவாசனம் நடந்தது. ஆடம்பரமாகச் செய்யக் கையிற் பொருளில்லாவிட்டாலும், செய்யவேண்டிய கார்யங்கள் ஒன்றும் விடாமல் செய்து, ஒரு பெருங்கவலை நீங்கினதாக மகிழ்ந்தார்கள் தாயும் தகப்பனும்.

குழந்தையும் லக்ஷணமாயும், புத்திகோசாமாயும் வளர்ந்து, மழலைச் சொற்களாலும், அரிய பல சிறு விளையாட்டுகளாலும் பெற்றோரை ஸந்தோஷக் கடலில் மூழ்குவித்தது. காலக்ரமத்தில் வயதும் 5 முடிந்தது. ஸர்க்காரில் ஏற்படுத்தியிருக்கும் கட்டாயப்படிப்புப் பள்ளியில் வித்யாப்யாஸத்திற்காக விடப்பட்டது. குழந்தையின் குசாக்ரமான புத்தியைக் கண்டு எல்லாருமே வியக்கும்படி யிருந்தது. படிப்பில் மிகுந்த ஆஸக்தியுள்ளதாயும், ஒருதரம் சொல்லுமுன் க்ரஹிக்கும் சக்திவாய்ந்ததாயுமிருந்தது. அந்தக் கீழ்தரக்கலாசாலை உபா[illegible]த்யாயர் அவ்வளவாக புத்திசாலி யென்[illegible] சொல்லவிடமில்லை. குழந்தை அவரை ஸ[illegible] 'அதென்ன' 'இதென்ன' 'அதேன்' 'அ[illegible]படி' என்று கேள்விகேட்டு அவரை வாயெ[illegible]காமல் செய்யும். 'இப்படி ஓயாமல் [illegible]வது கேட்டுக்கொண்டேயிருந்தால் அதி[illegible]ஸங்கி என்று எல்லாரும் சொல்லுவார்கள்' என்று சொல்லிக் குழந்தையைப் பயமுறுத்துவதை உபாயமாகக்கொண்டார் அவ்வுபாத்தியாயர்.

அப்பள்ளியில் படிப்பு முடிந்ததும், மேலே படிப்பிக்கச் சக்தியில்லாததால் வீட்டிலேயே நின்று தகப்பனருக்கு ஸகாயமாகவிருந்து வந்தான். ஸாவகாசமாக விருக்கும் வேளைகளில் புண்யாவாசனத்தன்று பட்ட கஷ்டத்தையும், யாரோ ஒரு மகாநுபாவர் வந்துதவினதையும் கதையாகச் சொல்லுவார்கள் தங்கள் புத்ரனுக்கு. அவனும் கவனமாகக்கேட்டு அவரிடம் மிகுந்த பக்தியும், அவரைக் கண்டுபிடித்து நமஸ்கரித்து, தன்னுடைய நன்றியை யறிவிக்க வேண்டும் என்ற ஆசையும் அவனுக்கு மேலிட்டுக் கொண்டிருந்தது.

வயது பனிரண்டு ஆயிற்று. ஒரு நாள் இரவு போஜநம் முடிந்து தாய் தந்தையரிருவருமிருக்கும் ஸமயம். புத்ரன் வந்து,

"அப்பா, அப்படி நமக்கு ஆபத்துக்குதவின புருஷன் யார், எங்கிருப்பவர் என்று தெரியவே தெரியாதா?" என்றான்.

"இல்லையே. ஏனப்பா?"

அதற்குப் பிறகு நீங்கள் அகஸ்மாத்தாகக் கூட அவரை ஸந்திக்கவே யில்லையா?"

"இல்லை அன்று கல்யாணம் முடிந்ததும், 'நான் வரவேண்டிய ஸமயம் நேர்ந்தால் வருவேன்' என்று விடுகதை போட்டதுபோல் சொல்லிவிட்டுச் சென்றனரே யதுதான். பிறகவரை, ஸ்வப்நத்தில்கூடக் காணவில்லை. ஏன், அது எதற்கு?"

"ஒன்றுமில்லை. நமக்கு அத்தகைய ஸமயத்தில் ஒத்தாசைசெய்த புண்யபுருஷனைக் கண்டு நமஸ்கரித்து, என் நன்றியை யவருக்கு அறிவிக்கவேண்டிய தென் கடமையென்று என் மனம் தூண்டுகிறது. ஆகையால் நீங்கள் அவர் எப்படி யிருப்பார் என்ற அடையாளத்தையாவது சொன்னால், இந்தப் பக்கமெல்லாம் சுற்றிப்பார்த்து வரலாமென்று நினைக்கிறேன்."

"அதற்கென்ன அவஸரமப்பா? அவரோ இன்னவூர் என்றுகூட நமக்குத் தெரியாது. நீயோ பால்யம், இன்னும் சில வருஷங்கள் கழித்துப் போகலாமே வேண்டுமென்றால்."

"அப்படியல்ல; இந்தவுலகில் எதை நிலையென்று நம்புவது. நான் பால்ய மென்றாலும், அவராவது வயதுசென்றவ ரல்லவா? ஆகவே, ஜீவித்திருக்கையிலேயே கண்டால் தானே. தாங்கள் மறுக்காமல் எனக்கு விடை கொடுத்தால், நான் எப்படியும் அவரைக் காணுவேன் என்ற தைர்யமட்டும் எனக்குண்டாகிறது" என்றான் பணிவுடன் அச்சிறுவன்.

தாய் தந்தையரும் தங்கள் புத்ரனின் நல்ல சிந்தையையும், க்ருதக்ஞதையையும், மநோதைர்யத்தையும் பார்த்து ஸந்தோஷித்தவர்களாய்த் தம் உயிரையேவிடுவதுபோல், தம்மை விட்டுப் பிரிய புத்ரனுக்கு உத்தரவு கொடுத்தனர். அவனும் தன் தாயாரால் தயார் செய்து கொடுக்கப்பட்ட வழியுணவு முதலிய வழித்துணைகளுடன், மறுநாட்காலை விடிய ஒரு நாழிகைக்கே புறப்பட்டுவிட்டனன்.

(தொடரும்.)

---

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### அன்பெனும் வலிய ஆயுதம்

காசி நகரத்தை ஓர் அரசனும் அரசியும் [ஆ]ண்டுவந்தனர். அவர்களுக்குப் பிள்ளைக[ள்] [இ]லை. அரசன் வயது சென்றவனாயிருக்[கும்] போது கோசல தேசத்துக் கொடுங்கோ[ல]ன் காசி நகரத்தரசன்மீது படையெடுத்து அரசனைத் துரத்திவிட்டு, நகரத்தைப் [கைப்ப]ற்றிக்கொண்டான்.

நகரத்தை விட்டு[நீ]ங்கி[ய] அரசனும் அரசியும் பக்கத்திலுள்ள காட்டில் வசித்து வந்தனர். பக்தியும் தைர்யமும் மிகுந்த அரசி "நாம் ஆண்ட நகரத்தில் இருக்கும் ஸேனையை ஒரு தடவை யுத்த ஸந்நாகத்துடன் பார்த்தால் என் குறையெல்லாம் தீரும். அவர்கள் தம் வாளைத் தீட்டுமிடத்தைக் கண்ணாரக்கண்டு, அவர்கள் ஸ்நானஞ் செய்யுமிடத்தில் நானும் ஸ்நானஞ் செய்தால் அப்பொழுதே என் ஜன்மக் குறை நீங்கும்" என்று தன் கணவனிடம் பலமுறை கூறினாள். அரசன் என்ன ஸமாதானம் கூறியும் அவள் கேட்காததால், ரஹஸ்யமாகக் காசிநகரத்தில் தனக்கு முன்பு குலகுருவாயிருந்தவரை வரும்படி சொல்லியனுப்பினான்

அரசனும் அரசியும் மிகவும் நல்லவர்களானதால், காசி நகரத்தார்கள் எல்லாரும் புதிய அரசனை வெறுத்து வந்தனர். குலகுருவிற்குத் தம்முன்னரசனிடம் மிகவும் பிரியம் இருந்தபடியால் ஒருவருக்கும் சொல்லாமல் காட்டிற்குச் சென்று அரசனைக் கண்டார். அரசன் தன் குறையைக் கூற, அவர் அதன் உண்மையை அறிய அரசியிடம் சென்றனர். குரு, சாஸ்திரம் நன்றாய்ப் படித்தவராதலால் ராணியைப் பார்க்கும்போதே, "அம்மா! உங்களிஷ்டம் கூடிய சீக்ரம் நிறைவேறும். உங்களுக்குப் பிறகு காசிநகரை ஆளும் ராசகுமாரன் உமக்குப் பிறக்கப் போகிறான்" என்று சொல்லிவிட்டு நகரத்திற்குச் சென்றார்.

நகரத்திற்குள் சென்ற குலகுரு, புதிய அரசனைக்கண்டு மஹாராஜாவே! நீர் இந்நகரை அடைந்தது முதல், இந்நகர்ச் சேனையைப் பார்க்கவில்லையே. உம்மை நேரில் பார்த்தால் அவர்களுக்குத் திருப்தியும், எம்மாதிரியான சேனை என்பது உமக்கும் தெரியவரும் என்று கூற, அரசனும் அடுத்த வெள்ளிக்கிழமை ஊருக்கடுத்த காட்டின் ஓரத்தில் ஸகல முஸ்தீப்புடன் ஸேனை வரவேண்டுமென்று ஆக்ஞாபித்தான்.

அந்தக் காட்டினருகே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது குறிப்பிட்ட தினத்தில் ஸேனை முழுவதும் அங்குவந்து பலவித யுத்தப் பயிற்சிகளை அரசன்முன் செய்து, ஆற்றில் ஸ்நாநம் முதலியன செய்து ஸாயந்திரம் நகரம் சென்றனர். இவைகளை யெல்லாம் காசிநகரத்துப் பழைய அரசனும், ராணியும் மரத்தில் ஒளிந்துகொண்டு பார்த்தனர். எல்லாரும் போய்விட்ட பிறகு, ராணி ஆற்றில் ஸ்நானம் செய்து குறை தீர்ந்தவளைப் போலக் காட்டிற்குள் சென்றாள்.

சில நாட்களுள் கர்ப்பந்தரித்து, பத்தாமாதம் அழகு சொரியும் மகனைப் பெற்றாள்.

அரசனும் அரசியும் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தனர். குழந்தைக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. தம் பழைய அரசனையும், அரசியையும் அவர்களுடைய குழந்தையையும் காண காசிநகரத்துச் ஜனங்கள் அடிக்கடிவர ஆரம்பித்தனர். இந்த ஸமாசாரம் எப்படியோ புதிய அரசன் காதில் எட்டிற்று. அரசனும் அவன் ராணியும் உயிருடனிருப்பதாலல்லவா இந்தக் கஷ்டமெல்லாம் என்று கொடுங்கோலரசன் நினைத்து, அவர்களைப் பின் கட்டுமுறையாக இழுத்துக்கொண்டுவரும்படி தனக்கு இசைவான ஸேவகர்களை அனுப்பினான். அவர்களும் அப்படியே செய்தனர். அந்த ராஜகுமாரன் அவர்களோடேயே வந்தனன். அரசகுலத்தில் பிறந்தவனானையால் அவனுக்குக் கோபம் பொங்கிற்று. சிறு குழந்தையாகையால் என்ன செய்வதென்று தெரியவில்லை. இதற்கெல்லாம் காரணமான புதிய அரசனை ஒரே ஓட்டமாக ஓடிக் கொன்றுவிடலாமா என்று நினைப்பான். தன் குமாரனுடைய கோபத்தைக் கண்ட கிழ அரசன், அவனைப் பார்த்து "அப்பா, குழந்தாய்! கோபம் பொல்லாது. அவரவர்கள் விதிப்படியே நடக்கும். நீ ஒன்றும் செய்யவேண்டாம்" என்றான். தன் தகப்பனாரிடம் பக்தி உள்ளவனாதலால், கோபத்தை அடக்கி வந்தான். அந்த ஊர் காளி கோவிலிற்கு எதிரே போகும்போது புதிய அரசன் அவர்களுக் கெதிரே வந்து, காளிக்குப்பலியாக இருவரையும் வெட்டிவிடும்படி தன் ஸேவகர்களுக்கு உத்தரவுசெய்தான். இதைக்கேட்டதும் அரசகுமாரனுக்கு அடக்க முடியாதகோபம் உண்டாயிற்று. அப்பொழுது கிழ அரசன் தன் மகன் கையைப் பிடித்துக் கொண்டு, "மகனே, போன ஜன்மத்தில் செய்த பாபத்தின் பயன் இது நமக்கு. நம்பகைவர்மீது உண்டாகும் கோபத்தைத்தீர்க்கும் வழி ஒன்று உண்டு. அது 'அன்பு' என்னும் வலிய ஆயுதம். அதனால் ஆகாதது ஒன்றுமில்லை. என்னருமை மகனே! இதுவே உனக்கு நான் சொல்லும் கடைசி மொழி" என்றான். ஸேவகர்கள் அவ்விருவரையும் அரசனையும் அரசியையும் பிடித்துச் சிரச்சேதம் செய்தனர்.

பழைய அரசனுடைய ஸேவகர் சிலர் அரசகுமாரனை தம்முடன் மறைவாக அழைத்துக் கூட்டிக்கொண்டு போயினர். அரசகுமாரனுக்கு ஸங்கீதத்தில் பிரியம் இருந்தபடியால், அடுத்த நகரத்திலுள்ள ஸங்கீத வித்துவான் ஒருவரிடம் சென்று, ஸங்கீதம் பயின்றான். அவனுக்குப் பதினாறு வயதானபோது, அவனைப்போல ஸங்கீத வித்தையில் வல்லவர்கள் ஒருவருமில்லை. ஆனால் அவன் தான் ராஜகுமாரனென்று ஒருவரிடமும் சொல்லவில்லை.

காசி நகரத்தையாண்ட கொடுங்கோலரசன்

ஆகாத நாளையில் பிள்ளை பிறந்தால், அண்டை வீட்டுக்காரனை என்ன செய்யும்?

ஸங்கீதக் கச்சேரி ஒன்று வைத்தான். அதற்கு வந்த பல பாடகர்களில் நம் அரசகுமாரனும் ஒருவன். இவன் பாட்டைக் கேட்ட அரசன் மிகவும் ஸந்தோஷித்துத்தன் ஆஸ்தான வித்வானாக நியமித்தான். அப்பொழுதுமுதல் அரசனுக்கும், ஸங்கீத வித்வானாக அமர்ந்த இராஜகுமாரனுக்கும் நெருங்கின நேசம் உண்டாயிற்று. அரசகுமாரன், தன் பெற்றோர்களைக் கொன்ற பாதகனை எப்பொழுது ரஹஸ்யமாகக் கொல்வதற்கு ஸமயம் ஏற்படுமென்று காத்துக் கொண்டிருந்தான். ஸமயமும் சீக்கிரம் ஏற்பட்டது.

ஒருநாள் கொடுங்கோலரசன் தன் பரிவாரங்களுடன் வேட்டையாடப்போனான். அவனும் ராஜகுமாரனும் மற்றவர்களுக்கு முன்னே சென்றதனால் மற்றவர்கள் பின் தங்கினர். கடைசியில் நடுக்காட்டில் வழி தெரியாது நின்றது கொடுங்கோலரசனும் ராஜகுமாரனுமே. அரசன் மிகவும் களைப்படைந்ததால் தன் பரிவாரம் வரும்வரைக்கும் இளைப்பாறலாமென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். நம் இராஜகுமாரனும் கூடவே வந்தவனாதலால் அவனும் கீழே இறங்க, அரசன் குதிரையை அவனிடம் ஒப்புவித்துவிட்டு தான் மரத்தடியில் படுத்துத் தூங்கினான்.

அப்பொழுது அரசனிடம் நம் இராஜகுமாரனைத்தவிர வேறொருவருமில்லை. தன் பெற்றோரை அரசன் கொன்றது அவன் ஞாபகத்திற்கு வந்தது. அவர்களைக் கொன்ற பாதகனைக் கொலை செய்யவேண்டுமென்று வெகுநாளாய் எண்ணங்கொண்டே, அரசனிடம் வேலைசெய்து வந்தான். இதுதான் தகுந்த ஸமயமென்று, அரசனது உடைவாளைச் சந்தடி செய்யாமல் உருவி, வெட்டப்போனான். அவன் கையை உயரத்தூக்கினபோது தன் தகப்பனார் இறக்குமுன் தனக்குச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அன்பு என்னும் வலிய ஆயுதத்தால் நம் பகைவர்களைத் தண்டிக்கவேண்டும் என்றது அப்பொழுதுதான் சொன்னது போலத் தோன்றிற்று. அரசகுமாரன் தன்னுள்ளெழுந்த கோபத்தை அடக்கி, 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்று எண்ணி உருவின வாளைக் கீழே வைத்தான்.

தூங்கிக்கொண்டிருந்த அரசன் விழித்தெழுந்தான். "அப்பா, நான் பயங்கரமான கனவு ஒன்று கண்டேன், அது என்னவெனில், முன் நான் சென்ற காசி நகரத்து அரசனின் மகன் என்னைக் கொல்வதற்கு வாளை ஓங்கினதாக—என்ன பயங்கரமாயிருந்தது தெரியுமா?" என்று அலறிக்கொண்டு கேட்க, அரசகுமாரன் தான் இன்னானென்றும் இத்தனை வருஷமாய்ச் செய்ய எண்ணியிருந்ததையும் கூறினான். அரசன், தான் செய்த பாபத்திற்குப் பச்சாத்தாபப்பட்டுத் தன் புத்ரியை அவனுக்கு விவாஹம் செய்வித்துக் காசி நகரத்தை அவனிடமே ஒப்புவித்தான்.

---

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

### LADIES' PAGES

#### தமயந்தி: 17—சிந்தனை

*முன்னை விதியான் முடிந்ததோ? மொய்குழலாள்*
*என்னைக் காண இசைந்ததோ?—தன்மரபுக்*
*கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட*
*தெவ்வாறு கொல்லோ இது?*

தமயந்தி நெடுநேரம் சிந்தனை செய்துகொண்டிருந்தாள். தன் தாயுடன் பலவாறு எண்ணமிட்டுத் தன்னைத் தானே தேற்றிக்கொண்டு "அம்மா! நான் ஒரு யோசனை சொல்கிறேன். கொஞ்சம் கவனித்துக் கேளும். ஏதோ நான் சொல்கிறேன் என்று இருக்காதீரும். இப்போது நான் சொல்லப்போவது என் தந்தைக்குக்கூடத் தெரியக்கூடாது; பரம ரஹஸ்யமாக இருக்கவேண்டும்; என் க்ஷேமத்தில் உமக்குக் கருத்திருக்குமானால் இந்தச் சமாசாரத்தை வெளிவராதபடி வெகு மறைவாகக் காக்க வேண்டும். எனக்கு நல்லதே உண்டாகுமென்ற திடநம்பிக்கை வந்திருக்கிறது. அதற்குப் பல நல்ல குறிகள் நான் கண்டிருக்கிறேன். அவற்றையெல்லாம் இப்போது சொல்வதில் காலதாமதம் ஏற்படும். எந்த அத்ருஷ்டம் என்னை உங்களிடம் அடையும்படி ஸுதேவர் மூலமாக வேலைசெய்ததோ, அதே அத்ருஷ்டம் அவர் மூலமாகவே என் தலைவரையும் காணும்படி செய்யும் என்பது என் திடமான நம்பிக்கை. ஆகவே நான் சொல்வதைத்

தடுக்காதிருக்க வேண்டும். ஸுதேவரை இப்போது அயோத்திக்குப் போகும்படி அனுப்புவித்தால், அவர் நிச்சயமாக நளமன்னவரை இங்கு அழைத்துவந்து விடுவர். இது ஸத்யம். ஆகவே நான் ஏதோ செய்கிறேன். ஆனால் இந்த விஷயம் என் தகப்பனாரும் அறியாதிருக்கும்படி நீங்கள் தயவுசெய்யவேண்டும். நான் செய்வதை நீங்களும் சுதேவருமல்லாது இந்தக் காற்று மறியக்கூடாது” என்று தமயந்தி சொன்னாள். இம்மொழிகளைக் கேட்ட விதர்ப்பநாட்டரசி ஒன்றுந்தோன்றாது செயலற்றுத் திகைத்துக் கிடந்தாள்.

பர்ணாதர் அப்பொழுதுதான் தமயந்தியை வாழ்த்திச் செலவு பெற்றுச் சென்றனர். அதே ஸமயம் தனது தாயின் ஸம்மதத்தைப் பெற்றுத் தமயந்தி ஸுதேவரை அழைத்துவரச் சொல்லியனுப்பினாள். மீண்டும் துயர்க்காளாய்த் தன் தாயின் மடிமீது சாய்ந்து சோர்ந்து கிடந்தாள். ஸுதேவர் வந்ததும் தமயந்திக்கு அடக்கமுடியாத் துக்கம் மேலிடக் கண்களில் நீர்ததும்ப, மார்பு படபடக்க எளியகுரலில் அவரை நோக்கி “விப்ரர் தலைவரே! உமக்கு அநந்தகோடி நமஸ்காரம்;

அந்தண ரென்போ ரறவோர், மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

என்றபெரியோர் வாக்கு உமக்கே பொருந்தும். படித்தறிந்த பெரியவரே! உம்மையல்லால் எமக்குச் சரண் யாருண்டு? ஏழை எளியவர் கீழ்த்தசை யடைந்தவர் இவர்களைக் காப்பதே உமக்கு விரத மல்லவா! இந்த ஏழையிடமும் சற்றுத் தயவு புரியவேண்டும்? எனக்கோர் உதவிசெய்யவேண்டும்; பெண்பணியென்று மறுக்கத்தகாது, உம்மிலுமுயர்ந்த உறவு எனக்கு யாருளார்? ஆபத்தில் உதவிசெய்பவரல்லவா உண்மை உறவினர்? என் தந்தைபோலும் நீங்கள் அயோத்தி செல்லவேண்டும். தற்செயலாக அங்குநீங்கள் போனதுபோல ருதுபர்ண மன்னவனைக்கண்டு இப்படிச் சொல்லுங்கள்: தமயந்திக்கு நாளை ஸ்வயம்வரம் நடக்கப்போகிறது. நாலா பக்கங்களிலிருந்தும் அரசர்களும் அரச குமாரர்களும் கூட்டங் கூட்டமாக அங்கு வந்துகொண் டிருக்கின்றனர். அவ்வழகி நளமன்னவரை மணந்தவள். எனினும், அவ்வீரர் உயிரோடிருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. ஆகவே அவள் மறுபடியும் ஸ்வயம்வரம் கூட்டி இரண்டாவது புருஷனை நாளைக்கு மாலையிடுகிறாள். பொழுதுவிடிந்ததும் ஸ்வயம்வர காலம் குறிப்பிடப்பட் டிருக்கிறது. அவளை நீங்கள் அடைய விரும்பினால் அக்காலத்துக்குள் போகவேண்டும்.”

இவ்வாறு சொல்லிய தமயந்தியின் உள்ளெண்ணத்தை முற்று முணர்ந்த, நல் விஷயங்களிலல்லாமல் வேறொன்றிலுந் தலையிடா அவ்வந்தணர்ச் சிகாமணி, அவ்வாறே செய்ய ஒப்பி அயோத்தி சென்று ருதுபர்ண ராஜனைக் கண்டு,

‘நாட்ட மூன்றுடை நாயகன் வரத்தினால் நங்கை
மீட்டுங்கன்னிகையாயினள்சுயம்வரம் விழைந்தாள்
கேட்டு மாநிலக் கிழவரு மவ்வழி யிறுத்தார்;
பூட்டு வார்சிலை மன்னநீ போதியேற் போவாய்’

எனக் கூறினார்.

இம்மொழிகளைக் கேட்ட ருதுபர்ணன் அளவற்ற ஸந்தோஷ மடைந்தான். தமயந்தியை மணக்கவேண்டுமென்ற பேராவல் கொண்ட அவன், வாஹுகனை நோக்கி, அவனைப் பலவாறு புகழ்ந்து, “உமது உதவிதான் வேண்டும். நீங்கள் மாத்திரம் மனம்வைத்தால் நான் ஓரே நாளில் விதர்ப்பை அடையலாம்; குறிப்பிட்ட காலத்துள் தமயந்தி ஸ்வயம்வரத்துக்கும் போகலாம். நான் அங்குபோக வெகு ஆவலாயிருக்கிறேன் என்றுமக்கு நான் சொல்லவேண்டியதில்லை என்பது திண்ணம்” என்றான். இம்மொழிகளைக் கேட்ட நளன் அளவிடமுடியாத் துயரமுற்று, மனம் பிளந்து, தன்னுணர்வற்றுச் சற்றே கிடந்தான். எனினும், தனது அளவுகடந்த துக்கத்தை வெளியிடாமலே சிந்திக்கலானான்:

“இதுவும் உண்மைதானோ? தமயந்தியும் இவ்வாறு செய்வளா? இவ்வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வந்திருக்கக்கூடுமா? அவளுக்கேதாவது ஒருவேளை புத்தி மாறிற்றோ? அல்லது அதிக கஷ்டத்தினால் அவ்வழகிக்கு என்னிடம் வெறுப்பேற்பட்டதோ? அல்லது என்னை அறிய அவள் செய்த உபாயமோ? ஏதோ? நான் வெகு கொடியவன்; நல்லெண்ண மில்லாதவன்; பழியே உருவெடுத்தவன். நான் அவளுக்கு இழைத்த தவறுக்கு அளவேயில்லை. கஷ்டத்திலு மென்னையே தெய்வமென்ன நம்பி, காட்டிலும் என்னைத் தொ

ஆகிறகாலத்தில் அவிழ்தம் பலிக்கும்.

டார்ந்து வந்த, அந்த உத்தமிக்கு நான் செய்த அக்கிரமத்தால், இவ்வாறு செய்ய மனந் துணிந்துவிட்டதே! ஆஹா! மனமோ மந்தி! அதிலும் பெண்மனம் ஸஞ்சலத்திற்கே யிடந் தருமன்றோ? அது அடிக்கடி மாறிக் கொண்டிருக்கும். என்றாலும், அவள் அப்படிச் செய்வாளா என்பதுதான் எனக்கு ஸந்தேகம். நான் குற்றம் செய்தவன்தான். அப்படியிருந்தாலும், அவளவ்வாறு செய்வாளா என்பது என்னால் நம்ப முடியவில்லை; எண்ணவும் என் மனமிடந்தராது. ஏனெனில் அவள் அவ்வளவு பழிகடந்த பாவை. உலகில் கிட்டவிருந்தால் முட்டப்பகை; தூரவிருந்தால் நிகளவுற வென்று சொல்வதுண்டு. ஒருவேளை என் விஷயத்தில் அதுவும்பொய்த்ததுவோ? அல்லது கிட்டவிருந்தால் நட்பு அப்படிக் கில்லாட்டால் வேறாகுமோ? ஒருகால், என்னைப் பிரிந்த துயரத்தால், சிந்தை முறிந்து, என்னிடத் தாசையை யொழித்து, இவ்வாறு செய்ய அவள் துணிந்தனளோ? இல்லாவிட்டால் அவள் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? ஒருபொழுதும் செய்யாளல்லவா? போனாற் போகட்டும். தனக்குக் குழைந்தைகளிருப்பதையும்மறந்தா இப்படிச் செய்வள்? இப்போதெனக்கென்ன கனவா, நினைவா, அல்லது மனக்கலக்கமா? உண்மை எதுவோ? எல்லாம் நேரில் கண்டால் நன்கு விளங்கும். அவ்வாறு செய்வது ருதுபர்ணனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவது மாத்திரமாகாது; என் மனத்தைக் கவர்ந்த ஸந்தேகத்தையும் போக்கச் சாதனமாகும். அது உண்மை!"

இவ்வாறு க்ஷணநேரத்துக்குள் அளவற்றுச் சிந்தித்து, அவ்வாறு செய்தது தோன்றாதபடி தனதரசனை நோக்கி,

"குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லால்
இறவாத என்திழையாள் இன்று,—பறிபீறி
செல்லித் பருவரால் ஓடு செடோடா!,
சொல்லப் படுமோவிச் சொல்"

எனமொழிந்து, தன் காதுகளை விரல்களால் பொத்திக் கொண்டான். மேலும், "அரசரேறே! அது எப்படியிருந்தா லென்ன? அதைப் பற்றிக் கவலை நமக்கேன்? மன்னவரே! நீங்கள் ஒன்றைச் சொன்னால் அதற்கிணங்க நடப்பதல்லாது வேறு யான் சிந்தித்தற் பொருந்துமா? அவ்வாறு சிந்திக்கத்தான் என் மனம் இடந்தருமா? ஆகையால், உமது கவலையை ஒழியும். தாங்கள் விரும்பியவிதமே உம்மைஒரே நாளில் விதர்ப்பத்திற்குக்கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். மற்றேன் யோசனை?" என்று சொன்னான். ருதுபர்ணன் வெகு ஸந்தோஷமடைந்தான். அவனுக்குத் தமயந்தியை மணக்க வேண்டுமென்ற அவா சிறு நாளிலிருந்தது, இந்நாளும் உதித்தது. எனவே அவன் வாஹுகனைப் பார்த்துப் பிரயாணத்திற்கு ஆயத்தமாகும்படி சொன்னான். அவனும் அதற்கிணங்க நல்ல குதிரைகளைப் பொறுக்கியெடுக்கக் குதிரை லாயத்திற்குப் போனான்.

அப்போது அவன் மனம் பெரு வியாபாரம் செய்து கொண்டிருந்தது. அது கட்டுக்குள் அடங்காது அபரிமிதமாக வேலைசெய்ய வாரம்பித்தது. "இவ்வாறு தமயந்தி உண்மையாகச் செய்திருப்பாளா? அப்படிச் செய்திருக்கக் கூடும் என்று நம்ப இடமில்லையே. அந்தப் பிராஹ்மணர்க்கென்ன பொய் சொல்லத் தலைவிதியா? அவரும் பொய் சொல்லார்; அவளும் இவ்வாறு செய்யத் துணியாள். பின் இந்த விஷயத்தின் உண்மை என்னவாக யிருக்கலாம்? இதுவென்ன?

முன்னை வினையான் முடிந்ததோ? மொய்குழலாள்
என்னைத்தான் காண இசைந்ததோ?—தன்மா
கொவ்வாத வார்த்தை உலகத் துரைப்பட்ட [புக்
தெவ்வாறு கொல்லோ இது?

இதில் ஏதோ சூழ்ச்சியில்லாம லிருக்காது. நேரிற் சென்றால் பட்டப். பகற்போல் தானே வெட்டவெளியாய்விடும். ஆத்திரப்படலாகாது. பொறுமையே நன்மை பயக்கும்" என்று எண்ணமிட்டுக்கொண்டே அவன் கடிய நடந்து தனது வேலைக்குதவக்கூடிய நல்ல உயர்ந்த ஜாதிக் குதிரைகளைப் பார்த்து யோசித்து வெகு வேகமாகப் போகக்கூடியவைகளும், நெடுந் தூரம் சளைக்காது செல்லக் கூடியவைகளுமான குதிரைகளைப் பொறுக்கி யெடுத்துத் தேரில் பூட்டினான். அக்குதிரைகள் மிகச் சிறந்தன. பார்வைக் கிளைத்தனபோலக் காணப்பட்டாலும், வேகத்தில் காற்றையும் பின்வாங்கச் செய்யக்கூடியன. அவற்றின் கால் நடையின் வேகத்திற்கிணையாக மனோவேகமும் வெட்குமெனலாம். மற்று அவற்றின் சுறுசுறுப்பும் பரபரப்பும் பராக்கிரமும் சொல்லுந் தரத்தவன்று. அவை உத்தம ஜாதிக் குதிரைகள்;

ஆகாயம் பெற்றது பூமி தாங்கினது.

களங்கமற்று நற்சுழிகள் பத்தும் கொண்ட ஸிந்து நாட்டுத் தாவும் புரவிகள்; நெடுநாழி காற்றையடக்கி விசையுடன் சிறிதும் சளைக்காதுவல்லமையுடன்ஓடக்கூடியன. இத்தகைய குதிரைகள் பூட்டிய தேரைத் தன்முன் வாஹுகன் ஓட்டிவரக்கண்ட ருதுபர்ணன், சற்றே மனஞ்சுளித்துக் கோபத்துடன் "இது என்ன? என் விருப்பத்தை நிறைவேற்றவோ அல்லது என்னை மோசஞ் செய்யவோ இக்குதிரைகளை நெடுநாழி பார்த்துப் பார்த்துப் பொறுக்கினீர்? இக்குதிரைகள் இப்பொழுதோ இனிச் சற்று நேரத்துக்கோ உயிரைவிடக்கூடிய கேவல நிலையிலிருக்கின்றன. இவற்றிற்குப் பலம் எங்கிருந்து வரும்? எவ்வாறு இவை நம்மையும் தேரையும் சேர்த்திழுக்கும்?" என்று கேட்டான். அதற்கு வாஹுகன் குதிரை லக்ஷணங்களைப்பற்றி விரித்துச் சொல்லித் தான் பொறுக்கியெடுத்த குதிரைகள் விதர்ப்பத்திற்குக் குறித்த பொழுதுக்குள் போகக்கூடியனவென்று சொல்லியதல்லாமல் "நான் சொல்வதில் உமக்கு ஸந்தேஹமிருந்தால், நீங்கள் எந்தக் குதிரைகளைப் பூட்டச் சொல்கிறீரோ அவற்றையே பூட்டுகிறேன். தாங்கள் சொல்லும் வார்த்தைக்கு இரண்டாவது முண்டோ?" எனக் கேட்டான்.

இம்மொழிகளைக்கேட்ட அயோத்திஅரசன் "வாஹுகரே! அவ்விஷயத்தில் தாங்கள் அல்லவோ நிபுணர். குதிரைகளின் மனத்தின் உண்மையான ஸ்வபாவத்தையும் அவற்றின் குணாகுணங்களையும் தாங்களேயன்றோ நன்குணர்ந்தவர்? உங்களுக்குத் தெரியாததல்ல. நீங்கள் நமது அவஸரத்திற்குத் தகுந்த குதிரைகளென எவற்றை அறிகிறீரோ அவற்றையே தேரில் பூட்டும்" எனச் சொல்லி வாஹுகனை புகழ்ந்து பேசினான். வாஹுகனும் தான் பொறுக்கியெடுத்த குதிரைகளைத் தேரில் பூட்டித் தன் கையாலவற்றின் கடிவாளங்களைப் பிடித்து நின்றான்.

முதன்முதல் அரசன் அதனுள் ஏறியதும், வார்ஷ்ணேயனையும் அதிலேயே ஏறும்படி வாஹுகன் திட்டஞ்செய்தான். அதற்கிணங்கி அவனும் ஏற, நளன் தேரை வெகு வேகவாக ஓட்டினான். குதிரைகளின் குளம்புகள் பூமிமேல் பட்டும்படாது விளங்க, அவன் தேரைப் பகுவேகமாக நடத்தினான். குதிரைநூல் முறைப்படி அவன் ஓட்டிய குதிரைகள் தம்மையோட்டுஞ் சாரதியே பிரமிக்கும்படி வெகு வேகமாய்க் காற்றுங் கண்டஞ்சும்படி பறந்தோடின. அவ்வாறு குதிரைகள் ஓடுவதை அதுவரை கண்டிராத அயோத்திமன்னன் ஆச்சர்யமுற்றுத் திகைத்துக் கிடந்தனன். நளனும், தான் கேட்ட மொழிகள் தன் மனதைக் குடைய அதன் வியாபாரத்தின் பரப்பிலாழ்ந்து கன்வேகமாகச் சிந்தித்துக் கனவு கண்டு கொண்டிருந்தான். தேரோ காற்றினுங் கடியதாய்ப் பறந்து கொண்டிருந்தது!

---

## பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**இந்திய ஜாதீய மஹாநாடு.**

நமது இந்திய ராஜாங்கநீதியில் செய்ய உத்தேசித்திருக்கும் சீர்திருத்தங்களைப்பற்றிய ரிபோர்ட்டு இந்தியா மந்திரியால் வெளியிடப்பட்டிருக்கிறதென்பதையும் அதைப் பற்றியபிரஸ்தாபமேகொஞ்சநாளாக எங்கும் கேட்டுவந்ததென்பதையும் சென்ற மாதத்தில் தெரிவித்தோம். அந்தச் சீர்திருத்தங்கள் நம் நாட்டுக்கு எவ்வளவு தூரம் அனுகூலத்தைக் கொடுக்கும் என்பதை ஆலோசிக்கிறதற்காக நாளது மாதத்தில் பம்பாய் நகரில் இந்திய ஜாதீய மஹாநாடு கூடிற்று. பதிவாக டிஸம்பர் மாதத்தில் கூடிப் பொதுவிஷயங்களைத் தீர்மானிக்கும் இந்தமஹாஸபை இப்போது மேற்கூறிய விஷயத்துக்காக மட்டும் பிரத்யேகமாக ஒருதரம் கூடிற்றென்றால் சீர்திருத்தத்தைப்பற்றி ஜனங்கள் கொண்டிருக்கும் அவா ஒருவாறு விளங்கும். இந்த மஹாஸபையில் அக்கிராசனாதிபத்யம் வகித்தவர் ஸ்ரீமான் ஹஸன் இமாம் ஸாஹிப் பகதூர் ஆவார். அவர் இதற்கு முன்னர் கல்கத்தாவில் ஐகோர்ட்டு ஜட்ஜியாக இருந்தவர். ஆகவே அவர் தீர்க்காலோசனையும் விஷயங்களை நன்றாகச்சீர்தூக்கிப்பார்க்கும் ஆற்றலும்உடையவர் என்பதில் தடையில்லை. சுமார் பதினாயிரம் பிரதிநிதிகள் கூடித் தீர்மானித்ததில், இந்தியா மந்திரியாருடைய ரிப்போர்ட்டைப்பெரும்பாலும் அங்கீகரித்தும், சில அம்சங்களை ஒரு சிறிது மாற்றுவதற்கு வேண்டிய விதத்தைத் தெரிவித்தும்

---

ஆகுங்காலத்தில் அடியாளும் பெண் பெறுவாள்.

இம்மஹாநாடு தனது பொது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளது. இந்த மஹாஸபை விஷயமாக நேர்ந்த ஒரு சில்லறைத் துர்த்தசையைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது ராஜீய விஷயத்தில் "மிதவாதிகள்" என்ற கக்ஷியார் இந்த ஸபைக்கு வராமலிருந்து விட்டனர். சீர்திருத்த ரிபோட்டை அடியோடே கண்டனம் செய்து விடப்போகிறார்கள் என்ற எண்ணத்தினால் அவர்கள் வராதொழிந்தனர் எனப்படுகிறது. இன்னும் அவர்கள் பிரத்யேகமாக வேறொரு மஹாநாடு கூடித் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளப் போவதாகவும் வதந்தி. இரு கக்ஷிக்காரர்களுடைய நோக்கமும் ராஜ்யத்தின் க்ஷேமமே. ஆதலால் ஒருவரையொருவர் ஸமரஸப்படுத்திக்கொண்டு போவது மேன்மை. "ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது" என்ற பழமொழி நமது ஞாபகத்துக்கு வருகிறது.

* * * *

**பத்திரிகை ஆசிரியர்களின்ஐரோப்பிய ஆகமனம்**

✓ ஐரோப்பிய ரணரங்கத்தைப் பத்திரிகாசிரியர்கள் பார்வையிட்டு, அங்கு நடக்கும் விஷயங்களைத் 'தங்கள் தங்களது பத்திரிகைகளில்வெளியிட்டு ஜனங்களுக்கு உண்மையைத் தெரிவிக்கச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் இங்கிலாந்துகவர்ன்மெண்டார் இந்தியாவிலிருந்து சில பத்திரிகாசிரியர்களை அழைத்திருக்கின்றனர். சென்ற வருஷத்திலும் சில பத்திரிகாசிரியர்கள் கிழக்கரங்கமாகிய மெஸபொடோமியாவுக்குச்சென்றுவந்தனர். இவ்வருஷத்தில் மேற்கரங்கத்தைப் பார்வையிட அழைக்கப்பட்டவர்களில் நமது மாகாணத்து "ஹிந்து" பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் எஸ். கஸ்தூரிரங்கய்யங்கார் அவர்கள் ஒருவராவார். ஸ்ரீமான் அய்யங்காரவர்களுடைய தேசபக்தியும் ராஜபக்தியும் முதல்தரமானவை. சென்ற பன்னிரண்டு வருஷங்களுக் கதிகமாக அவர்கள் தமது பத்திரிகையை நடத்திவரும் மாதிரியிலிருந்து அவர்களுடைய ஸுயேச்சா மனப்போக்கும், புகழையும் இகழையும் கவனியாமல் செய்யும் கடமையும் நன்கு வெளியாகும். இத்தகைய உத்தமகுணம் வாய்ந்த சிறந்த தேசாபிமானியைக் கவர்ன்மெண்டார் அழைத்தது நமக்கெல்லாம் பெருமையைத் தருகின்றது. இன்னும் ஒரு விஷயம் கவனிக்க வேண்டியுள்ளது. ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் ஒரு உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ குலத்தி லுதித்தவர்கள். ஆகவே, கடற்பிரயாணம் செய்யக்கூடாது என்று விதித்திருக்கும் பழைய கொள்கையைப் புறக்கணித்துவிட்டு, கடமையையே பிரதானமாகக் கொண்டு, இந்த வார்த்திகத்தில் தேகச் சிரமத்தையும் கருதாது, ஐரோப்பாவுக்குச் செல்லும் பிரயாணிகளுக்கு, ஜர்மனியரால் நேரக்கூடிய அபாயங்களையும் பொருள்படுத்தாமல், ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் சென்றதைக் கவனிக்கும்போது நமது மனம் அத்யந்த சந்தோஷத்தால் பூரிக்கின்றது. பரதனுடைய குணநிசயங்களைக் கேட்டகுகன், "இரவியென்பான், தன் புகழ்க்கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்குமா போல், மன்புகழ் பெருமை நுங்கள் மரபுளோர் புகழ்களெல்லாம், உன் புகழாக்கிக் கொண்டாய் உயர்குணத் துரவுத் தோளோய்" என்ற கம்பர் வாக்கு நமது ஞாபகத்துக்கு வருகிறது. ஸ்ரீமான் அய்யங்காரவர்களுக்கு அரோக திடகாத்திரமும் மேன்மேலும் புகழும் உண்டாகவேண்டுமென்று நாம் ஸர்வேசுவரனை ஸதா பிரார்த்தித்த வண்ணமாகவே இருப்போம்.

* * *

**ஆயுர்வேத யூனானிவைத்ய விஷயம்.**

நாளது மாதம் நிகழ்ந்த சென்னைச் சட்டசபையில் ஆயுர்வேத சாஸ்திரத்தையும் கவர்ன்மெண்டார் கவனித்து அபிமானிக்கவேண்டுமென்று ஒருதீர்மானம் கொணரப்பட்டது. அதைக் கவர்ன்மெண்டார் ஒப்பவில்லை. அதனோடு நிற்காமல், அவ்விஷயத்தைக் கண்டித்துப் பேசிய ஆங்கில ஸ்ரீமான், ஆயுர்வேத முறையை ஒரு 'முறை' யென்று சொல்லக்கூடாதென்று தம் கருத்தைத் தெரிவித்தனர். ஐரோப்பாவில் வைத்ய சாஸ்திரம் பிரபல மடைவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னமேயே, ஆயுர்வேத சாஸ்திரம் இந்தியாவில் பிரபலமடைந்து, கோடிக்கணக்கான ஜனங்களுடைய தேக ஆரோக்கியத்தைக்கவனித்து வந்ததென்பதை ஸ்ரீமான் மறந்து போயிருக்கலாம், அல்லது தெரிந்துகொள்ளாம லிருக்கலாம், இது நிற்க, இவ்விஷயமாக மைஸூர் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் காரியம் நமக்கு இன்பத்தைக் கொடுக்கின்றது. ஆயுர்வேத யூனானி முறைகளைக் கைப்பற்றுவோர்க்குப் புரோத்ஸாகம் உண்டாகும்படி அந்த ராஜ்யத்தார் மாதம் ஒன்றுக்கு 75. ரூபா வித்யாவிர்த்திகொடுத்துஇரண்டு(மேல்நாட்டுமுறை)வைத்யர்களைக் கல்கத்தாவுக்கும் டில்லிக்கும் அனுப்பி முறையே ஆயுர்வேதக்கிரமத்தையும் யூனானிக் கிரமத்தையும் கற்றுக்கொள்ளச் செய்திருக்கின்றனர். இன்னும் ஆயுர்வேத யூனானி முறைகளை அவலம்பிக்கும் இரண்டு வைத்யர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபா விகிதம் விர்த்தி கொடுத்து, மேல்நாட்டு முறையைக் கற்றுக் கொள்ளும்படியும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு நிஷித்தமாகத் தோன்றியவை மைஸூருக்கு உதகிருஷ்டமானதற்குக் காரணம் என்ன? "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் நமது போதினியின் தலையங்கக் கோட்பாடான திருவள்ளுவர் வாக்கை நமது கவர்ன்மெண்டாருக்கு நாம் எடுத்துச் சொல்லலாமா?

* * *